## தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான கொடுக்கல் வாங்கல் அறிக்கை

---

தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் 2019, 2020 மற்றும் 2021 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த மூன்று ஆண்டுகளுக்கான செயற்பாட்டு அலுவல்கள் மீதான இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க என்னால் பராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என கருதும் சபையின் செயலாற்றுகை தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

அந்த அதிகாரச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம், அனைத்து கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனங்கள் தொடர்பாக வருடாந்த நிதிக்கூற்றுக்கள் விதிகளின் மூலம் காட்டக் கூடியவாறான காலப் பகுதியினுள் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அந்த அதிகாரச் சட்டத்தின் 38(1)(ஈ) இன் பிரகாரம், வருடாந்த அறிக்கைகள் மற்றும் ஏனைய நிதிக் கூற்றுக்கள் உரிய நேரித்தினுள் தயாரிக்க நேரிடுகின்றது என உறுதிப்படுத்த வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்கு உரிய வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 ஜுன் 02 திகதிய இலக்கம் பீஈடி/12 கொண்ட அரச பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 6.5.1 இற்கு இணங்க மற்றும் 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 சுற்றறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள செயற்பாட்டுக் கைநூலின் பந்தி இலக்கம் 6.6 இன் படி கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 2022 திசெம்பர் 14 திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2019, 2020, 2021 மற்றும் 2022 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2019, 2020, 2021 ஆகிய ஆண்டுகளுக்கான நிதிக் கூற்றுக்கள் உரிய தினத்தில் பூர்த்தி செய்யப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும், 2018 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம் சமர்ப்பிக்கப்படாமையால் மேற்கூறிய ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகள் தயாரித்தல் தாமதமாகியதென | கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் மற்றும் வருடாந்த வரைவு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

அறிவிக்கின்றேன்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

**கணக்காய்வு அவதானிப்புக்கள்**

(அ) சபையின் கீழ் காணப்படும் 32 பண்ணைகளில் போபத்தலாவ, தயகம, ஹொரகெலே, மிரிஸ்வத்த, ரிதியகம, ருக்கத்தன, ஸிரிங்கபாத, மெனிக்பாலம ஆகிய பிரதான பண்ணைகளின் கடந்த பல வருடங்களின் வரிக்கு முன்னரான தேறிய இலாபம் / நட்டம் பின்வருமாறு காணப்பட்டது.

| பண்ணையின் பெயர் | இலாபம் / (நட்டம்) ரூபா மில்லியன் 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|
| போபத்தலாவ | (13.12) | 6.87 | (21.53) | (48.74) | (59.85) |
| டயகம | (0.73) | 21.77 | (58.62) | (31.15) | (53.51) |
| ஹொரகெலே | 60.51 | 46.79 | 89.02 | 85.88 | 66.55 |
| மிரிஸ்வத்த | 6.97 | 21.60 | 42.46 | 20.84 | 26.73 |
| ரிதியகம | (15.85) | (128.05) | (424.51) | (8.05) | (165.40) |
| ருக்கத்தன | 16.82 | 12.82 | 13.51 | 8.85 | 13.38 |
| ஸிரிங்கபாத | 38.46 | 18.69 | 39.83 | 15.65 | 14.73 |
| மெனிக்பாலம | (44.73) | 26.61 | (85.21) | (132.11) | (132.68) |

மேற்கூறிய தகவல்களின் படி ஹொரகெலே, மிரிஸ்வத்த, ருக்அத்தன மற்றும் ஸிரிங்கபாத ஆகிய பண்ணைகளின் வரிக்கு முன்னரான தேறிய இலாபம் கிரமமாக குறைவடையும் போக்கொன்று அவதானிக்கப்பட்டதுடன், போபத்தலாவ, டயகம, ரிதியகம மற்றும் மெனிக்பாலம ஆகிய பண்ணைகளில் மேலும் நட்ட நிலைமை அதிகரிக்கும் போக்கொன்று காணப்படுகின்றதென அவதானிக்கப்பட்டது.

**முகாமைத்துவத்தின் கருத்துரை**

மிரிஸ்வத்த பண்ணையில் கோழிக் குஞ்சுகளின் விற்பனை விலை குறைவடைந்திருந்தல் மற்றும் உற்பத்திச் செலவுகள் அதிகரித்த காரணத்தினால் நட்டம் அதிகரித்திருந்தது.
ஸிரிங்கபாத பண்ணையைச் சேர்ந்த 500 ஏக்கர்கள் முதலீட்டு மேம்பாட்டு சபைக்கு வழங்குவதற்கு நேரிட்டமையால் அதன் தேங்காய் வருமானம் முழுமையாக இழத்தல், ஹொரகெலே ஸிரிங்கபாத, ருக்கத்தன ஆகிய பண்ணைகளில் 2016 ஆண்டு தேங்காய் விலை குறைவடைதல், 2017, 2018 ஆகிய ஆண்டுகளில் தெங்கு உற்பத்தியின் செயற்பாட்டுச் செலவுகள் அதிகரித்தல் நட்டம் தொடர்ச்சியாக அதிகரிப்பதற்கு காரணமாக இருந்ததென அறிவிக்கின்றேன்.
மெனிக்பாலம, தயகம மற்றும் போபத்தலாவ பண்ணைகளில் பால் உற்பத்தி குறைவடைதல் மற்றும் விலங்குகளின் பெறுமதி குறைவடைதல் மற்றும் 2015, 2016 ஆண்டுகளில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது மிருகங்களின் பெறுமதி சரியாக மேற்கொள்ளப்படாமை மறை ரீதியான தாக்கம் காரணமாக அந்த

**பரிந்துரை**

சபையின் கீழ் காணப்படும் பண்ணைகளை இலாபமடையக்கூடிய நிலைமைக்கு மாற்ற வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | ஆண்டுகளின் இலாபம் குறைந்திருந்தது. ரிதியகம பண்ணை 2015 ஆண்டு 2500 மாடுகள் இறக்குமதி செய்வதற்கு நேரிட்டது. பாரியளவில் உணவு மற்றும் பராமரிப்புச் செலவு மேற்கொள்வதற்கு நேரிட்டிருந்தமையால் நட்டமொன்று காட்டப்பட்டது. | |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மற்றும் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 5 வருடங்களுக்கு மிகையான கடன்பட்டோர் மீதிகள் முறையே ரூபா 84,714,279 தொகை மற்றும் ரூபா 82,081,430 தொகையாக காணப்பட்டது. இந்த கடன் மீதிகளை அறவீடு செய்வதில் நிச்சயமற்ற தன்மையொன்று காணப்பட்டது. | இந்த கடன்பட்டோர் மீதிகள் உட்பட சபையின் நீண்ட காலமாக அறவிடப்படாத கடன் மீதிகள் தொடர்பாக தீர்மானமொன்று எடுப்பதற்காக வரிசை அமைச்சின் பிரதான நிதி அதிகாரி உட்பட குழுவொன்று நியமனம் செய்யப்பட்டு அந்த அனைத்து கடன்பட்டோரையும் பகுப்பாய்வு செய்து மீளாய்வு செய்து தொடர் நடவடிக்கை எடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கடன் அறவீடு செய்வதற்காக விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் தேங்காய் ஏலவிற்பனைகளின் போது அந்த அதிகார சபையினால் வெளியிட்டுள்ள சட்டத் தொகுப்பின் படி குறிப்பிட்ட காலத்தினுள் தென்னை இருப்பு அகற்றப்படாமையால் தரகர்களிடம் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த 5 வருடங்களை மிகைத்த நிலுவை தரை வாடகை மற்றும் தண்டப் பணம் ரூபா 18,164,830 தொகையாக காணப்பட்டதுடன், அந்த மீதிகளை அறவீடு செய்வதற்காக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் தேங்காய் ஏல விற்பனவில் விதிக்கப்பட்டுள்ள விதிகளும் சட்ட விதித் தொகுப்பிற்கு இணங்க சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என மேற்கொள்ளப்பட்ட கூற்றுடன் இணங்க முடியாததுடன் 15 வருடங்களுக்கு மிகையான கடன்பட்டோர் மீதிகளை அறவீடு செய்வதற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. | நிலுவை தரை வாடகை மற்றும் தண்டப்பண மீதிகள் தரகர்களிடம் அல்லது அந்த தேங்காய் இருப்பினை விடுவித்த பொறுப்பாக உள்ள உத்தியோகத்தர் களிடம் அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2011 ஆண்டு முதல் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி பொறுப்பு நிதியத்திலிருந்து அறவீடு செய்யப்பட வேண்டிய ரூபா 3,689,824 இற்கான தொகையினை அறவீடு செய்வதற்காக 2021 திசெம்பர் 31 திகதி வரை நடவடிக்கை எடுத்திருந்த போதிலும் அறவீடு செய்ய முடியாமல் இருந்து. | இந்த தொகை தொடர்பாக உரிய நிறுவனத்திற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டதுடன் அந்த நிறுவனத்தினால் குறிப்பிட்ட பெறுமதி வரிசை அமைச்சின் ஊடாக தீர்ப்பதற்காக அப்போதைய வரிசை அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டது என ஆகும். அதன் படி எம்மால் இது தொடர்பாக வரிசை அமைச்சில் விசாரணை செய்யப்பட்டதுடன் குறிப்பிட்ட விடயம் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. | பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பு நிதியத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய தொகையினை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 2013 ஆண்டு முதல் காணப்படும் இறந்த இறக்குமதி செய்யப்பட்ட மாடுகளுக்காக பெற வேண்டிய காப்புறுதி நட்டஈட்டுத் தொகை ரூபா 19,253,926 தொகை 2021 திசெம்பர் 31 திகதி வரை அறவீடு செய்வதற்கு முடியாமல் இருந்தது. | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள காப்புறுதி நட்டஈட்டு உரிமை தொடர்பாக பல்வேறு விசாரணைகள், கலந்துரையாடல்கள், கோரிக்கைகள் பல மேற்கொள்ளப்பட்டு இருந்ததுடன் அந்த கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி அறவீடு செய்ய முடியாத பெறுமதி ஒன்று என மற்றும் தற்போது நீண்டகாலம் கடந்திருந்தமையால் மீண்டும் விசாரணை மேற்கொள்ளல் மிகவும் கடினமான நிலைமையாக காணப்படுவதனால் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள அந்த உரிமைத் தொகையை ஏடுகளில் இருந்து பதிவழிப்பதற்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | பெற வேண்டிய காப்புறுதி நட்டஈட்டுத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.2 விகிதாசாரப் பகுப்பாய்வு

சபையினால் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2014 முதல் 2018 வரையான 5 வருடங்களுக்கு உரிய முக்கியமான கணக்கீட்டு விகிதாசாரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (கீழே உள்ள அட்டவணையும் விளக்கமும்) | சபையின் தொழிற்படு மூலதன சிக்கல் ஒன்று காணப்படுகின்றது என ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. எதிர்காலத்தில் அந்த சிக்கலை தீர்த்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | தொழிற்படு மூலதனச் சிக்கலை தீர்ப்பதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| ஆண்டு | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|
| நடைமுறை விகிதாசாரம் | 0.79 | 0.42 | 0.37 | 0.75 | 0.59 |
| திடீர் விகிதாசாரம் | 0.51 | 0.24 | 0.21 | 0.49 | 0.38 |
| மொத்தலாப விகிதாசாரம் | 37.32% | 37.25% | 33.8% | 27.06% | 19.09% |
| தேறியலாப விகிதாசாரம் | 3.12% | 1.8% | 0.33% | (52.5%) | (10.51%) |
| கடன்பட்டோர் புரள்வு விகிதம் | 9.86 | 11.86 | 16.92 | 0.09 | 0.07 |
| நிலையான சொத்துக்கள் புரள்வு விகிதம் | 1.23 | 0.85 | 0.91 | 0.49 | 0.48 |
| அலைவு விகிதம் | 1.76 | 3.47 | 3.35 | 0.08 | 0.08 |
| கடன்பட்டோர் அறவீடு செய்யும் காலம் | 37 | 31 | 22 | 32 | 27 |

மேற்கூறிய தகவல்களின் படி சபையின் நடைமுறை விகிதாசாரம் திடீர் விகிதாசாரம் 2014 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரை முறைப்படி படிப்படியாக நலிவடைந்து இருந்ததுடன் அதனை பாராட்டத்தக்க மட்டம் ஒன்றில் காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. அதன் படி சபையின் தொழிற்படு மூலதனச் சிக்கலொன்று காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது. மேலும் மொத்த இலாபம் மற்றும் தேறிய இலாபம் 2015 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரை முறையே நலிவடைந்திருந்ததுடன், 2017 ஆண்டின் பின்னர் தேறிய நட்டம் ஒன்று வரை நலிவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இறக்குமதி செய்யப்பட்ட மாடுகள் காணப்படும் ரிதியகம பண்ணையில் மருந்துகள், தடுப்பூசிகள், பால் கரத்தல் மற்றும் கால்நடைபட்டி பராமரிப்பு | 2021 ஆண்டு பண்ணையின் செலவுகள் அதிகரிப்பதற்கான காரணங்கள் விரிவாக இதற்கு முன்னர் | பண்ணை இலாபம் பெறும் நிலைமைக்கு மாற்றுவதற்காக நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | செலவுகளும் உட்பட நேர்ச் செலவுகளுக்காக 2021 ஆண்டில் ரூபா 714 மில்லியன் தொகையாக இருந்ததுடன், அந்த நேர்ச் செலவுகள் மேற்கொண்ட பின்னர் செயற்திட்டத்தின் மொத்த நட்டம் ரூபா 16 மில்லியனாக இருந்தது. அதன் படி 2021 ஆண்டின் போது பண்ணையின் நேர் செலவை அணவல் செய்வதற்கு முடியாது இருந்தது என அவதானிக்கப்பட்டது. | சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | வேண்டும். |
| (ஆ) | போபத்தலாவ பண்ணையில் 2021 ஆண்டில் திரவப் பால் விற்பனை வருமானத்தின் தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | 2021 ஆண்டின் இறுதிக் காலாண்டிற்காக திரவப் பால் விற்பனைக்காக ஒரு நாளைக்கு 3,000 லீற்றர், லீற்றர் ஒன்று ரூபா 134 வீதம் கொள்வனவு செய்வதற்காக தனியார் கம்பனி ஒன்றுடன் உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டு இருந்த போதிலும் 2021 ஒக்தோபர் மாதத்தில் உடன்பட்டிருந்த விலையை விட குறைவாக விற்பனை செய்யப்பட்டிருந்தமையால் பண்ணைக்கு ரூபா 235,648 இற்கான நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்தது. | டென்டர் விலை ரூபா 134 தொகையாக இருந்த போதிலும் Fat மற்றும் SNF பெறுமதி மீது 12.5 சதவீதம் என குறைதல் அல்லது அதிகரித்தல் மீது 50 சதம் கூட்டுதல் அல்லது குறைவடைதல் நேரிடுகின்றது. அக் காலம் மழை காலமாக இருந்தமையால் இச் சதவீதம் குறைவடைதல் மீது விலை குறைவடைந்திருந்தது. இது வழமையான நிகழ்வொன்றாகும். | திரவப் பால் விற்பனை உடன்பட்ட விலைக்கு மேற்கொள்ள வேண்டும். |
| (ii) | 2021 ஆண்டின் மூன்றாவது காலாண்டில் பண்ணையினால் ஒப்படைக்கப்பட்ட பால் லீற்றர்களின் எண்ணிக்கை மற்றும் கார்கீல்ஸ் நிறுவனத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பால் லீற்றர்கள் இடையே வித்தியாசங்கள் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டதுடன் அதன் படி பண்ணைக்கு திரவப் பால் ரூபா 1,704 லீற்றர்களுக்காக ரூபா 219,735 இற்கான நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. | பண்ணை மற்றும் கார்கீல்ஸ் நிறுவனம் அளவை அலகு (கிலோ மற்றும் லீற்றர்) என இரண்டு பயன்படுத்தப்பட்டமையால் இவ்வாறு நேரிட்டிருந்ததுடன் ஒரே அளவை முறைமை இரு தரப்பினரினாலும் பயன்படுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | உடன்பட்டவாறு பால் விற்பனை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | மெனிக்பாலம பண்ணையில் கடந்த 2014 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை பால் பெற்றுக் கொள்ளக் கூடிய பசுமாடுகளின் எண்ணிக்கை 742 முதல் 288 வரை குறைந்திருந்தமையால் 8 வருட காலப் பகுதியுள் 454 பாற்பசுக்கள் குறைவடைதலும் பாற்பசுக்களின் பால் உற்பத்தி சராசரி 14.78 முதல் 12.60 வரை குறைவடைதலும், குறைந்த விலையில் | இச் செயற்திட்டத்தின் கீழ் பண்ணையில் பிறந்த அனைத்து பசுக் கன்றுகளும் விவசாயிகளுக்கு வினியோகிக்கப்பட்டு இருந்தது. பசுக் கன்றுகள் பண்ணையில் பேணப்படாமையால் பண்ணையில் காணப்படும் பாற்பசுக்களின் இறப்பு மற்றும் | பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பால் விற்பனை செய்யப்பட்டமையால் பண்ணையில் பால் விற்பனை வருமானம் வீழ்ச்சியடைதலும் பண்ணையில் நட்டம் அதிகரிப்பதற்கு நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது என அவதானிக்கப்பட்டது. | ஏனைய உபாதைகள் மீது பண்ணையில் இருந்து அகற்றப்படும் மாடுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ற மாற்றீடு காணப்படாமையால் பாற்பசுக்கள் எண்ணிக்கை விரைவாக குறைவடைதல் ஆண்டுதோறும் நடைபெற்று இருந்தது. இலங்கையில் காணப்படாத நோய்கள் ஏற்படுதல் மற்றும் அதற்காக உரிய தடுப்பூசி வகைகள் இலங்கையில் காணப்படாத காரணத்தினால் இறப்பு எண்ணிக்கை அதிகரித்திருந்தது. இதன் காரணமாக எதிர்பார்த்த மட்டத்தில் பண்ணை பசுக்களின் எண்ணிக்கை தொடர்ச்சியாக பேணிச் செல்ல முடியாதிருந்த காரணத்தினால் பண்ணையின் பால் உற்பத்தி குறைவடைதல் ஏற்பட்டிருந்தது. | |
| (ஈ) | போபத்தலாவ மற்றும் மெனிக்பாலம பண்ணைகளின் மேலதிக வருமானம் என பண்ணைக் காணியில் மரக்கறி வகைகள் பயிர் செய்யப்பட்டு விளைச்சலை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மொத்த வியாபாரிகளினால் வழங்கப்படும் நாளாந்த கூடிய விலையின் படி குறிப்பிட்ட விளைச்சலை சந்தைப்படுத்தும் அலுவல்கள் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும், உருளைக் கிழங்கு, கரட் மற்றும் கோவா விற்பனை இலாபம் தொடர்பாக மேற்கொண்ட தெரிவுப் பரிசோதனையின் போது குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது என அவதானிக்கபட்டதுடன் அதன் படி போபத்தலாவ பண்ணையில் உருளைக் கிழங்கு, கரட் மற்றும் கோவாவுக்காக முறையே 25,282 கிலோகிராம்கள் தொகையும் 4,121 மற்றும் 11,990 தொகைக்காக ரூபா 316,232 இற்கான ரூபா 102,429 இற்கான மற்றும் ரூபா 173,550 இற்கான வருமானம் ஒன்றினையும் இழந்திருந்தது என அவதானிக்கப்பட்டது. | சந்தைகளில் மரக்கறி விற்பனை செய்யும் போது விலைகளை தீர்மானிப்பது விற்பனை விலைக் குழுவின் மூலமே ஆகும். சில சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்வோர்கள் விலைகள் வழங்கிய போதிலும் கொள்வனவு செய்வதற்காக முன் வருவதில்லை. அச் சந்தர்ப்பத்தில் குறைந்த விலைக்கு விற்பனை செய்தல் வழமையாக நடைபெறுகின்றது. சில கொள்வனவாளர்கள செயற்கை விலை ஒன்று ஏற்படுத்துவதற்காகவும் கூடிய விலை ஒன்று சமர்ப்பிக்கின்றது. | நாளாந்தம் கூடிய விலையின் படி குறிப்பிட்ட விளைச்சல்களை விற்பனை செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் கீழ் 26 பண்ணைகளில் பசு மற்றும் எருமை மாடுகள் 10,088 தொகை காணப்பட்டது. அந்த மாடுகளுக்காக 2020 ஆண்டின் போது மாதத்திற்கு கால்நடை உணவு 1,096.432 மெட்ரிக் தொன்கள் என ஆண்டிற்காக 13,157 மெட்ரிக் தொன்கள் செலவிடப்படுவதுடன் அதற்காக ரூபா 733,663 மில்லியன் தொகை மற்றும் 2021 ஆண்டின் போது மாதத்திற்கு கால்நடை உணவு 938.807 மெட்ரிக் தொன்கள் என ஆண்டிற்காக 11,266 மெட்ரிக் தொன்கள் செலவிடப்படுவதுடன், அதற்காக ரூபா 726,893 தொகை தனியார் நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | 2021 ஆண்டு பண்ணையில் செலவுகள் அதிகரிக்க காரணங்கள் விரிவாக இதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பண்ணையை இலாபம் பெறும் நிலைமைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (அ) 2020 மற்றும் 2021 ஆண்டுகளுக்காக இறக்குமதி செய்யப்பட்ட பசு மாடுகள் செய்திட்டம் செயற்படுத்தப்படும் மெனிக்பாலம, தயகம, பொபத்தலாவ மற்றும் ரிதியகம ஆகிய 04 பண்ணைகளில் கவனம் செலுத்திய போது அந்த பண்ணைகளில் கால்நடை உணவு செலவு பால் வருமானத்தின் முறையே 53 சதவீதம் மற்றும் 63 சதவீதமாக இருந்தது. அதேபோல் 2020 ஆண்டில் ஏனைய பசு மாட்டுச் செயற்திட்டங்களுடனான 15 பண்ணைகளில் கால்நடை உணவுச் செலவு பால் வருமானத்தில் 60 சதவீதமாக இருந்தது. அதன்படி, கால்நடை உணவுக்கான செலவை மாத்திரம் கவனத்தில் எடுத்த போது (மருந்து மற்றும் மின்சாரம் ஆகிய செலவுகள் தவிர) பால் வருமானத்தை அதிகரித்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | அப்போது சந்தையில் காணப்பட்ட விலைகளுக்கு ஒப்பாக தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையினால் பால் விற்பனை செய்யப்பட்டுள்ளது உச்ச விலையிலேயே ஆகும். பால் உற்பத்திச் செலவுகள் அதிகரித்துச் செல்லல் சபைக்குக் கட்டுப்படுத்த முடியாத வெளிக் காரணிகளாகிய விவசாயம் வீழ்ச்சியடைதல், இறக்குமதி எல்லை விதித்தல், பிரயாண வரையறை, கைத்தொழில்கள் மூடப்படல் ஆகிய பல்வேறு காரணங்களினால் உள்ளீட்டு விலைகள் பாரிய அளவில் அதிகரித்தமையால் உற்பத்திச் செலவு கணிசமாக அதிகரித்திருந்தது. | பால் உற்பத்தி கிரயத்தைக் குறைத்துக்கொள்ள வேண்டும். |
| (ஆ) பயன்படுத்தப்படாத கால்நடை உணவு உற்பத்தி செய்யும் இயந்திரங்கள், மிகையான கால்நடை உணவு செலவுகள் மற்றும் பாசு மாடு செயற்திட்டங்களின் செயற்திறன்களை கவனம் செலுத்திய போது செயற்திட்ட சாத்தியக்கூறு ஆய்வு அறிக்கையின் படி செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இரண்டாம் ஆண்டு முதல் இலாபம் அடைவது எனவும் | சாத்தியக்கூறு ஆய்வு நடாத்தப்பட்ட காலப் பகுதியில் காணப்பட்ட பொருளாதார காரணிகள் 2019, 2020, 2021 ஆண்டுகளின் போது பாரியளவில் மாற்றத்திற்கு உள்ளாகியிருந்தது. அதாவது பணவீக்கம் அதிகளவில் அதிகரித்துச் செல்லல், நிலவிய | பண்ணைகளை இலாபம் பெறு நிலைமைக்கு கொண்டு வர வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 4 வது ஆண்டு முதல் இலாபம் கிரமமாக 10 வருடங்கள் வரை அதிகரிப்பதெனவும் காட்டப்பட்டிருந்த போதிலும் 2012 மற்றும் 2013 ஆண்டுகளின் போது இறக்குமதி செய்யப்பட்ட பசு மாடுகளை வைத்திருக்கும் பண்ணைகள் தொடர்பாக 2019, 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் மெனிக்பாலம பண்ணையில் முறையே ரூபா 72,532,028 இற்கான, ரூபா 21,078,530 இற்கான மற்றும் ரூபா 25,233,137 இற்கான நட்டம் ஒன்றும், ரிதியகம பண்ணையில் முறையே ரூபா 266,437,694 இற்கான, ரூபா 99.050,282 இற்கான மற்றும் ரூபா 213,944,240 இற்கான நட்டமொன்றும் போபத்தலாவ பண்ணையில் முறையே ரூபா 29,107,043 இற்கான நட்டமொன்றும், ரூபா 4,628,164 தொகை மற்றும் ரூபா 4,185,177 இற்கான இலாபம் ஒன்றும் தயகம பண்ணையில் முறையே ரூபா 32,280,028 இற்கான நட்டமொன்றும் ரூபா 3,239,143 மற்றும் ரூபா 4,627,726 இற்கான இலாபம் ஒன்றும் பெற்றிருந்தது. அதன்படி, அந்த சாத்தியக்கூறு அறிக்கை பிழையானது என மற்றும் செயற்திட்டம் வெற்றியடையாதது என அவதானிக்கப்பட்டது. | கொவிட் தொற்றுநோய் காரணத்தினால் ஏற்பட்டிருந்த தாக்கத்திற்கு நேரடியாக இந்த பண்ணைகளின் இலாப நட்டக் கணக்கிற்கு பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தது. அதன் காரணமாக மேற்கூறிய விலகல் ஏற்பட்டிருந்ததென எமது மதிப்பீடாகும். | |
| (இ) | 2020 பெப்ரவரி முதல் வ/ப மகவெலி கால்நடை உணவு வர்த்தகக் கம்பனிக்கு கால்நடை உணவு கொள்வனவு செய்வதற்காக பணம் காணப்படாத காரணத்தினால் அந்த நிறுவனம் மாத்திரம் தாய்க் கோழிக்காக 2 வகையான உணவு உற்பத்தி செய்வதற்கு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதன் மூலம் மாத்திரம் கம்பனிக்கு 6 மாதங்களில் ரூபா 6,538,000 இற்கான சேமிப்பொன்று ஏற்பட்டிருந்தது. அதன் காரணமாக பண்ணைகள் இடையே சில பண்ணைகள் பெற்றுக்கொள்ளும் சிறிய இலாபத்தினை உச்சமட்டம் ஆக்குவதற்கும், பெற்றுக்கொள்ளும் நட்டத்தை இலாபமாக மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் கீழ் காணப்படும் 3 பண்ணைகளுக்கு சொந்தமான கோழி உணவு தயாரிக்கும் 5 இயந்திரங்கள், மகவெலி கால்நடை உணவு வர்த்தகக் கம்பனிக்கு சொந்தமான கோழி உணவு தயாரிக்கும் அரைத்தல் மற்றும் கலவை இயந்திரம், இலங்கை கோழி வளர்ப்பு | கால்நடை உணவு உற்பத்தி செய்வதற்கு தேவையான மூலப்பொருட்களுக்காக பாரிய மூதலீடொன்று ஒரே தடவையில் மேற்கொள்ள வேண்டியிருக்கும், பாரியளவில் உணவு உற்பத்தி செய்யும் நிறுவனங்களில் இருந்து போட்டி கூறுவிலைகளின் மூலம் கொள்வனவு செய்தல் மூலம் அனேகமாக அனுகூலமாக இருக்கும். சபையில் குறைந்த கொள்திறனுடனான மிகவும் பழமை வாய்ந்த இயந்திர உபகரணங்கள் காணப்படுவதுடன், அவற்றின் செயற்திறனும் மிகவும் குறைவானது. அதன் காரணமாக நிலவுகின்ற தேவைப்பாட்டினை முழுமையாக பூர்த்தி செய்ய முடியாமையால் மற்றும் அனேக சந்தர்ப்பங்களில் உற்பத்திக் கிரயம் | சபையின் இலாபகரத் தன்மையை அதிகரிக்கும் உத்திகளை செயற்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அபிவிருத்தி (தனியார்) கம்பனிக்கு சொந்தமான கோழி உணவு தயாரிக்கும் 2 அரைத்தல் மற்றும் கலவை இயந்திரங்களை பயன்படுத்தி, பயன்படுத்தப்படாமல் காணப்படும் நிலப் பிரதேசத்தை பயன்படுத்தி உணவு உற்பத்திக்கு தேவையான பயிர் செய்யக்கூடிய ஆரம்ப மூலப் பொருட்கள் (சோளம், சோயா) உற்பத்தி மூலம் மற்றும் கால்நடை உற்பத்தித் திணைக்களத்தின் புதிய அறிவினை பயன்படுத்தி உயர்ந்த தரத்திலான கால்நடை உணவு உற்பத்தி மூலம் மற்றும் கால்நடை உணவுச் செலவுகளை குறைப்பதன் மூலம் சபையினை இலாபகரத்துடன் பேணிச் செல்லக் கூடிய இயலுமை தொடர்பாக மதிப்பாய்வொன்று மேற்கொண்டிருக்கவில்லை. | அதிகரிப்பதனால் திறந்த போட்டி அடிப்படையிலான கூறுவிலைகளின் கீழ் வெளி நிறுவனங்களில் இருந்து கால்நடை உணவு கொள்வனவு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. | |
| (ஈ) | பகிரங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் நல்லாளுகைக்கான வழிகாட்டல் சுற்றறிக்கையின் 1.6 வகைப்படுத்தல் தரப்படுத்தலின் படி, சபை B தர நிறுவனம் ஒன்றாக காணப்படுவதுடன், அந்த வழிகாட்டலின் 5.2.2(அ) படி B தரத்திலான நிறுவனம் ஒன்றின் மூலதன முதலீடு ரூபா 2.5 மில்லியனை விட மிகையாக மேற்கொள்ளப்படும் செயற்திட்டங்களுக்காக சாத்தியக்கூறு ஆய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், ரூபா 97.06 பெறுமதியான 11 செயற்திட்டங்களுக்காக அவ்வாறு சாத்தியக்கூறு ஆய்வு ஒன்று 2021 ஆண்டில் மேற்கொண்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் மேற்கொள்ளக் கூடிய ரூபா 2.5 மில்லியனை விடக் கூடிய செயற்திட்ட முதலீடுகளுக்காக சாத்தியக்கூறு ஆய்வுகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மூலதன முதலீடு ரூபா 2.5 மில்லியனை விட மிகையான செயற்திட்டங்களுக்காக சாத்தியக்கூறு ஆய்வொன்று மேற்கொள்ள வேண்டும். |
| (உ) | மெனிக்பாலம மற்றும் போபத்தலாவ பண்ணைகளின் பண்டக் கணிப்பீட்டு அறிக்கைகளின் படி பயன்படுத்த தகுதியற்ற பண்டங்கள் (condemn) என 2020 ஆண்டில் பண்ட விடயங்கள் முறையே 153 தொகை மற்றும் 1225 தொகையும், 2021 ஆண்டில் பண்ட விடயங்கள் முறையே 161 மற்றும் 965 என காணப்பட்டிருந்த போதிலும், அந்த பண்டங்கள் தொடர்பாக எடுக்க வேண்டிய தொடர் நடவடிக்கை தொடர்பாக பண்ட கணிப்பீட்டு சபையினால் 2022 மார்ச் 10 திகதி வரை பரிந்துரைகள் வழங்கியிருக்கவில்லை. இந்த 153 பண்ட | சிதைவடைந்த பண்டங்கள் (பயன்படுத்த தகுதியற்ற பண்டங்கள்) கவனம் செலுத்தும் ஆண்டிற்குரிய நியமனம் செய்யப்பட்ட குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட பின்னர் அவை வேறாக ஒதுக்கப்பட்டு வைக்கப்படுகின்றது. அதன்படி, 2020 ஆண்டின் சிதைவடைந்த பண்டங்கள் எண்ணிக்கைகள் மீண்டும் 2021 வருடாந்த பண்டக் கணிப்பீட்டு அறிக்கைக்கு | பயன்பாட்டிற்கு தகைமையில்லாத பண்டங்கள் அப்புறப்படுத்தி இருக்காவிடின் பயன்பாட்டிற்கு தகைமையில்லாத பண்டங்களின் (condemn) கீழ் காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விடயங்களில் 122 விடயங்கள் மற்றும் 1,225 பண்ட விடயங்களில் 551 விடயங்களும் 2021 ஆண்டின் பண்டக் கணிப்பீட்டின் போது பயன்பாட்டிற்கு தகுதியற்ற பண்டங்கள் என இனங்கண்டிருக்கவில்லை. | உட்படுத்தப்படாமையால் அவை உட்படுத்தப்படவில்லை. | |
| (ஊ) | மெனிக்பாலம பண்ணையில் 2020 மற்றும் 2021 பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் படி sprinkler system இன் கீழ் காணப்படும் 135 பொறியியல் துணைக் கருவிகளுக்கான பற்றாக்குறை ஒன்று அவதானிக்கப்பட்டது. | இவ்வாறு 135 விடயங்களுக்கான பற்றாக்குறை ஒன்று ஏற்படுவதற்கான காரணம் போபத்தலாவ மற்றும் மெனிக்பாலம நீர்த் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்வதற்காக குழாய் நீர் முறைமையொன்று நிர்மாணிப்பதற்காக துணைக் கருவிகள் பயன்படுத்தப்பட்டமையாகும். எனினும், இந்த அகற்றுதல், அகற்றுவதற்கான கட்டளைகளைப் பயன்படுத்தி முறைப் பிரகாரம் அகற்றப்படவில்லை என ஏற்றுக்கொள்கின்றேன். | பொருட்பதிவேட்டு விடயங்கள் தொடர்பாக சிறந்த உள்ளகக் கட்டுப்பாடொன்று பேணல் வேண்டும். |
| (எ) | போபத்தலாவ பண்ணையின் 2021 நிதிக் கூற்றுக்களின் படி வியாபார மற்றும் ஏனைய இருப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 78,702 தொகை பெறுமதியான நுகர்வுப் பொருட்கள் பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் மூலம் பௌதீக ரீதியாக உறுதிப்படுத்தியிருக்கவில்லை. | இது 1136 தேங்காய்களுக்கான பெறுமதியாக காணப்படுவதுடன், அதனை வருடாந்த இருப்புக் கணிப்பீட்டுக் குழுவினால் வருடாந்த இருப்புக் கணிப்பீட்டு அறிக்கையில் உட்படுத்தியிருக்காமை தவறொன்றாகும். அத்துடன் எதிர் காலத்தில் இவ்வாறான பலவீனங்கள் ஏற்படாதவாறு செயற்படுவேன். | வருடாந்த இருப்புக் கணிப்பீடு சரியாக மேற்கொள்ள வேண்டும். |
| (ஏ) | மெனிக்பாலம மற்றும் போபத்தலாவ பண்ணைகளில் 2021 ஜுலை – திசெம்பர் வரையான மாதங்களில் உள்ளவாறான மொத்த பால் உற்பத்தி லீற்றர்கள் முறையே 578,620 மற்றும் 497,591 தொகையாக காணப்பட்ட போதிலும், 2021 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி இரண்டாவது அரையாண்டில் உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட மொத்த பால் உற்பத்தி லீற்றர்களின் எண்ணிக்கை முறையே 788,256 தொகை மற்றும் 635,888 | இறக்குமதி செய்யப்பட்ட பால் பசுக்கள் படிப்படியாக வயதடைதலுடன் உற்பத்தி செயற்திறன் குறைவடைவதனால் அந்த மாடுகளின் வயது 5 வருடங்களை மிகைக்கும் போது மற்றும் தவணை இலக்கம் 3 இன் பின்னர் உற்பத்தி குறைவடைவதனால் அவ்வாறு உற்பத்தி இலக்கு குறைக்கப்பட்டுள்ளது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி பண்ணைகளின் பால் உற்பத்தியை அதிகரித்துக்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகையாக காணப்பட்டது. அதன்படி, செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் உற்பத்தியில் உள்ளவாறான உற்பத்தி பால் லீற்றர் எண்ணிக்கை முறையே 73 சதவீதம் மற்றும் 78 சதவீதம் ஆகும். | | |
| (ஐ) | 1974 மற்றும் 1992 ஆகிய ஆண்டுகள் முதல் சபையினால் நடாத்தப்பட்டு வரும் 25 பண்ணைகளுக்கு சொந்தமான 24,382.11 ஏக்கர் காணியின் உரிமை காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவில் இருந்து மற்றும் காணி ஆணையாளர் நாயகத்திடமிருந்து முறைப் பிரகாரம் உரித்தாக்காமல் இந்தக் காணிகளில் கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புக்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. காணி மறுசீரமைப்பு ஆணைக் குழுவின் மெதுவான இயங்கும் தன்மை காரணமாக வர்த்தமானி மூலம் உரிமையை வழங்குவதற்கு தாமதம் ஏற்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. | பதில் அளிக்கப்படவில்லை. | காணியின் உரிமையை முறைப் பிரகாரம் உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஒ) | வ/ப கோழி வளர்ப்புக் கம்பனி தொடர்பாக 2020 மார்ச் 12 திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக வழங்கியிருந்த அமப/20/08090/217/052 இலக்கங் கொண்ட 2020 ஜுன் 18 ஆந் திகதி அமைச்சரவை தீர்மானத்தின் படி தற்போது தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைக்கு 100 சதவீதப் பங்குகள் உரிமையுள்ள வ/ப ஸ்ரீ லங்கா கோழி வளர்ப்பு அபிவிருத்தி (தனி) கம்பனியை கலைப்பதற்கும், அந்தக் கம்பனிக்கு சொந்தமான அனைத்து சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைக்கு உரித்தாக்குவதற்கும் அந்த கம்பனிக்கு சொந்தமான பண்ணை ஒன்றான மாவத்த பண்ணையின் பதவியணியினரை அவர்களின் உரிமை பாதுகாக்கக் கூடியவாறு தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைக்கு உள்ளடக்குவதற்கு மாவத்த பண்ணையை தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைக்கு சொந்தமான பண்ணை ஒன்றாக நடாத்திச் செல்வதற்கும் தீர்மானிக்கப்பட்டு இருந்த போதிலும் கம்பனியை கலைத்து அனைத்து சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை உரித்தாக்கி | வரையறுக்கப்பட்ட இலங்கை கோழி வளர்ப்பு அபிவிருத்தி கம்பனி, தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைக்கு உரித்தாக்குவது தொடர்பாக ஆரம்ப விடங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதுடன், ஒழித்துக்கட்டுனர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளது. 2022 நவம்பர் மாதம் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைக்கு புதிய பணிப்பாளர் சபை ஒன்று நியமனம் செய்யப்பட்டுள்ளதுடன், அதற்கு ஒத்த நிகழ்வாக வ/ப இலங்கை கோழி வளர்ப்பு அபிவிருத்தி கம்பனியின் புதிய பணிப்பாளர் சபை பெப்ரவரி மாதம் நியமனம் செய்யப்பட்டுள்ளதுடன் அதன் படி தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு பணிப்பாளர் சபை பிரேரணை ஒன்று அங்கீகரிக்கப்பட்ட பின்னர் ஒழித்துக்கட்டுனரினால் குறுகிய காலத்தில் தொடர் நடவடிக்கை பூர்த்தி செய்யப்படும். | அமைச்சரவை தீர்மானத்தின் படி வ.்.ப இலங்கை கோழி வளர்ப்பு அபிவிருத்தி (தனி) கம்பனியை கலைப்பதற்கும் அந்த கம்பனிக்கு சொந்தமான அனைத்து சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைக்கு உரித்தாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பதவியணியை உள்ளடக்குதல் 2022 திசெம்பர் 31 திகதி வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஓ) | அமப/15/0940/631/018-1 கொண்ட 2015 ஜுலை 16 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி வ/ப மஹாவலி கால்நடை வர்த்தகக் கம்பனிக்கு சொந்தமான அனைத்து வளங்கள், சொத்துக்கள், பங்குகள் மற்றும் முகாமைத்துவம் உரிய சட்ட செய்முறைகளின் கீழ் பங்குகளை தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைக்கு உரித்தாக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் 31 திகதி வரை கம்பனியின் பங்குகளின் உரிமையில் 27 சதவீதத்தை மாத்திரம் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைக்கு உரித்தாக்கியிருந்ததுடன் ஏனைய பங்குகளில் மஹாவலி அதிகார சபை சொந்தமான 45 சதவீதமும், நெதர்லாந்து பினான்ஸின் இற்கு சொந்தமான 23 சதவீதமும் மற்றும் மஹாவலி வலையத்தில் விவசாயிகளுக்கு சொந்தமான 5 சதவீதமும் ஆக உரிமை காணப்பட்டது. இந்தப் பங்குகள் பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைக்கு உரித்தாக்குவதற்கு தேவையான சட்ட செய்முறைகளை கடைபிடித்தல் 2022 திசெம்பர் 31 திகதி வரை மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | வரையறுக்கப்பட்ட மஹாவலி கால்நடை வர்த்தக கம்பனி மஹாவலி அதிகார சபை. தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை, நெதர்லாந்து கம்பனி ஒன்று மற்றும் விவசாய அமைப்பு ஒன்று ஆகிய தரப்பினர் பங்காளர்களுள் அடங்குகின்றனர். அதில் கூடிய பங்குகளுக்கு உரிமையாளர்களான மஹாவலி அதிகார சபை பல வருட காலமாக கோரியவாறு தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைக்கு பங்குகளை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அமைச்சரவை தீர்மானத்தின் படி கம்பனிக்கு உரித்தான அனைத்து வளங்கள், சொத்துக்கள், பங்குகள் மற்றும் முகாமைத்தும் உரிய சட்ட செய் முறைகளின் கீழ் தேசிய பண்ணை அபிவிருத்தி சபையினால் உரித்தாக்கப்பட வேண்டும். |

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவர திணைக்களத்தின் மற்றும் மத்திய வங்கி வருடாந்த அறிக்கையின் படி 2019, 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் போது நாட்டின் ஒட்டுமொத்த பால் உற்பத்தி முறையே 374,015,943 தொகை 413,635,518 தொகை மற்றும் 425,369,628 தொகை லீற்றர்களும் தேங்காய் உற்பத்தி 3,086,000,000 தொகை, 2,792,000,000 தொகை மற்றும் 3,120,000,000 தொகை காய்களும் கோழி உற்பத்தி 20,411,050 தொகை 24,277,830 தொகை மற்றும் 24,310,690 தொகை பிராணிகளும் காணப்பட்டதுடன் அவற்றில் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி | சபையின் பால் பசுக்களில் இருந்து வருடாந்தம் 10 மில்லியன் லீற்றர்கள் பால் பெற்றுக் கொள்வதுடன் ஒரு விலங்கிலிருந்து ஒரு நாளைக்கு சுமார் 7 லீற்றர் பெறப்படுகின்றது. இலங்கையின் பால் உற்பத்தி ஒரு நாளைக்கு 10 இலட்சம் லீற்றர்கள் காணப்படுவதுடன், ஒரு பசு மாட்டிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் எண்ணிக்கை 2-3 லீற்றர் மாத்திரமே. மேலும் சபைக்கு சொந்தமான பால் | சபையின் பண்ணைகளில் வளங்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதன் மூலம் சந்தையின் பங்கினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| சபையின் பால் உற்பத்தி 12,432,324 தொகை, 12,027,883 தொகை மற்றும் 9,774,168 தொகை லீற்றர்களும், தேங்காய் உற்பத்தி 18,606,035 தொகை 13,860,239 தொகை 17,018,801 தொகை, தேங்காய்களும், கோழி உற்பத்தி 2,763,600 தொகை 3,034,226 தொகை மற்றும் 3,084,591 தொகை பிராணிகளும் காணப்பட்டது. அதன் படி சபையின் பங்களிப்பு பால் உற்பத்தியில் 3.32 தொகை 2.91 தொகை மற்றும் 2.3 தொகை சதவீதமும் தேங்காய் உற்பத்தி 0.6 தொகை 0.5 தொகை மற்றும் 0.55 தொகையும் கோழி உற்பத்தி 13.54 தொகை 12.5 தொகை 12.69 தொகை காணப்பட்டமையால் பங்களிப்பு மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | பண்ணைகளில் உற்பத்தி இயலுமையை முன்னேற்றி உச்சமட்ட உற்பத்தியை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் நாட்டில் மொத்த கோழி செறிவிற்கு ஒப்பாக சபையினால் பராமரிக்கப்படுவது 1% -2% எண்ணிக்கை மாத்திரமே. மூலதன முதலீடு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்காக போதியளவு நிதி ஏற்பாடுகள் காணப்படாமை உற்பத்தியை அதிகரிப்பதில் தடையாக காணப்பட்டது. தெங்கு பயிர் செய்கைக்கு தேவையான உரம் பெற்றுக் கொள்ள முடியாமையால் தேங்காய் உற்பத்தியில் குறைவொன்று காணப்பட்டது. | |

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையுடைய கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கந்தளாய் கரும்பு பயிர்செய்கை நிலத்தில் 1000 ஏக்கர் காணிப் பகுதி சோளம் செயற்திட்டம் ஒன்றிற்காக கிழக்கின் எழுச்சியின் கீழ் சுழல் நிதியொன்று ஏற்படுத்துவதற்கு 2007 ஜூன் 28 திகதி சபைக்கு ரூபா 37.55 மில்லியன் தொகை மத்திய வங்கியிலிருந்து வழங்கப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டம் தோல்வியடைந்திருந்தமையால் 2011 செப்தெம்பர் 11 திகதி காணியை சீனிக் கம்பனிக்கு உரித்தாக்கும் சந்தர்ப்பத்தில் சோளம் செயற்திட்டத்தின் கீழ் காணப்பட்ட சுழல் நிதியத்தின் மீதித் தொகையான ரூபா 17,549,342 தொகை மத்திய வங்கியின் கருத்துரை மற்றும் 2007 ஜூன் 20 திகதி அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் திறைச்சேரிக்கு அனுப்ப வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு மேற்கொள்ளாமல் அவற்றில் ரூபா 4,253,795 தொகை செலவிடப்பட்டு இருந்ததுடன் மீதியாகிய ரூபா 13,295,637 தொகை மாத்திரம் 2011 ஆண்டு முதல் நிலையான வைப்புக்களின் கீழ் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன். செலவிடப்பட்ட தொகை சபையின் விலங்குகளுக்காக சோளம் புற் பயிர்சைகை அபிவிருத்திக்காக பயன்படுத்தப்பட்டது என அறிவிக்கின்றேன். | அமைச்சரவை தீர்மானித்தின் பிரகாரம் மீதித் தொகை திறைசேரிக்கு அனுப்பப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மெனிக்பாலம பண்ணையில் மதிப்பீட்டு அறிக்கையின் படி பசு மாடுகள் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடிய நாளாந்த சராசரி பால் எண்ணிக்கை அந்த மிருகங்களின் பெறுமதியுடன் இணக்கம் செய்த போது நாளாந்தம் சராசரி கூடிய பால் எண்ணிக்கை ஒன்று காணப்படும் மிருகங்களுக்காக குறைந்த பெறுமதி ஒன்றும் நாளாந்த சராசரி குறைந்த பால் எண்ணிக்கை ஒன்று காணப்படும் மிருகங்களுக்காக கூடிய பெறுமதி ஒன்றும் என மிருகங்களின் பெறுமதி கணிக்கப்பட்டிருந்ததுடன் அதன்படி நாளாந்த சராசரி பால் எண்ணிக்கையை கவனத்தில் எடுக்காமல் மிருகங்களின் பாரம் மாத்திரம் கவனத்தில் எடுப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. | இணங்குகின்றேன். மிருகங்களின் பால் சுரப்பு அடிப்படையில் மிருகங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டதுடன் சராசரி பால் உற்பத்தி சமமான பெறுமதி ஒன்றினை கொண்டிருந்த போதிலும் பால் சுரப்புகள் உயர்ந்த தரத்தில் அந்த மிருகங்கள் காணப்படின் அந்த மிருகங்களின் பால் விற்பனை செய்யும் பெறுமதி குறைந்த பெறுமதி ஒன்றினை கொண்டிருந்தது என அறிவிக்கின்றேன். | மிருகங்களின் பெறுமதியை கணிக்கும் போது சரியான கொள்கை ஒன்றினை கடைபிடிக்க வேண்டும். |
| (இ) | போபத்தலாவ பண்ணையில் 2020 ஆண்டின் பண்ட கணிப்பீட்டு அறிக்கையின் படி பயன்பாட்டிற்கு தகைமையற்ற பண்டங்கள் 1,225 வகையில் 453 தேங்காய்களும் 348 kg சிவப்பு அரிசியும் ஆகும். அதே போல் 2021 பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் படி பயன்பாட்டிற்கு தகைமையற்ற பண்டங்கள் 965 விடயங்களில் 643 தேங்காய்கள் காணப்பட்டன. அதன் படி ஏனைய பண்ணைகளின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட அந்த அரிசி மற்றும் தேங்காய் இருப்பு பயன்படுத்துவதற்கு அல்லது விற்பனை செய்யாமல் அழிவடைவதற்கு இடமளிக்கப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | குறிப்பிட்ட ஆண்டில் பண்ணை ஊழியர்களுக்கு சலுகை விலைக்கு விற்பனை செய்வதற்காக எடுத்து வரப்பட்ட இந்த அரிசி இருப்பு போக்குவரத்தின் போது சேதமடைந்த காரணத்தினால் நுகர்வுக்குப் பொருத்தமற்ற நிலைமை ஒன்றினை அடைந்திருந்ததினால் அவை மீதியாகக் காணப்பட்டது. அதே போல் ஏனைய பண்ணைகளில் இருந்து பண்ணையின் ஊழியர்களுக்கு வினியோகிப்பதற்காக எடுத்து வரப்பட்ட தேங்காய்கள் தெரிவு செய்யப்பட்ட பின்னர் மீதியாக காணப்படுபவை என அறிவிக்கின்றேன். | பயன்பாட்டிற்கு பொருத்தமான பண்டங்கள் முறையான செய்முறை ஒன்றின் மூலம் அப்புறப்படுத்த வேண்டும். |

**3.5 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் 4 பண்ணைகளிடம் ஒரு நாளைக்கு ஒரு தடவையில் 3.75 தொன் கால்நடை உணவு உற்பத்தி செய்யக் கூடிய 4 இயந்திரங்கள் காணப்பட்டது. அவற்றின் மூலம் ஒரு மாதத்திற்கு கால்நடை உணவு 900 மெ.தொ. (3.75* | கால்நடை உணவு உற்பத்தி செய்வதற்கு தேவையான மூலப் பொருட்களுக்காக பாரிய முதலீடு ஒன்று ஒரே தடவையில் மேற்கொள்ள நேரிடுகின்றது. பாரிய எண்ணிக்கையான உணவு உற்பத்தி செய்யும் நிறுவனங்களில் இருந்து போட்டி அடிப்படையான | விளைவற்றுக் காணப்படும் கால்நடை உணவு உற்பத்தி செய்யக் கூடிய இயந்திரங்களை பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திகதி 30* 8 மணித்தியாலம்) நாள் என ஆண்டிற்கு 10,800 மெற்றிக் தொன்கள் உற்பத்தி செய்யக் கூடிய இயந்திரங்கள் 01 முதல் 12 வருட காலம் விளைவற்றுக் காணப்பட்டது என கண்டறியப்பட்டது. | விலைகளின் மூலம் அனேக சந்தர்ப்பங்களில் அனுகூலமாக காணப்படும் சபை குறைந்த கொள்திறனுடன் மிகவும பழமையான இயந்திரங்களாக காணப்படுவதுடன் அவற்றின் செயற்திறனும் மிகவும் குறைந்தது. அதன் காரணமாக நிலவும் தேவைப்பாட்டினை முழுமையாக பெற்றுக் கொள்ள முடியாதமையால் மற்றும் அநேக சந்தர்ப்பங்களில் உற்பத்தி கிரயம் அதிகரிப்பதனால் திறந்த போட்டி அடிப்படை கூறுவிலைகளின் கீழ் வெளிநிறுவனங்களில் இருந்து கால்நடை உணவுகள் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | |
| (ஆ) | தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் கீழ் காணப்படும் 4 பண்ணைகளுக்கு சொந்தமான 04 கோழி உணவு உற்பத்தி இயந்திரங்கள் காணப்படுகின்றது. அதற்கு மேலதிகமாக மஹாவலி கால்நடை உணவு வர்த்தகக் கம்பனிக்கு சொந்தமான கோழி உணவு தயாரிக்கும் அரைத்தல் மற்றும் கலவை இயந்திரம் 01 உம், இலங்கை கோழி வளர்ப்பு அபிவிருத்தி (தனியார்) கம்பனிக்கு சொந்தமான கோழி உணவுகள் தயாரிக்கும் அரைத்தல் மற்றும் கலவை செய்தல் இயந்திரங்கள் 02 காணப்பட்டன. அவற்றின் மூலம் கோழி உணவுகள் ஒரு மாதத்தில் 2,580 மெற்றிக் தொன்கள் (10.75* நாள் 30* 8 மணித்தியாலம்) தொகையாக ஆண்டிற்கு 30,960 மெற்றிக் தொன்கள் உற்பத்தி செய்யக் கூடிய இயலுமை காணப்பட்டது. எனினும் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அந்த 08 இயந்திரங்களும் 01 வருடம் முதல் 12 வருடங்கள் வரையான காலம் விளைவற்றுக் காணப்பட்டது என கண்டறியப்பட்டது. | கால்நடை உணவு உற்பத்தி செய்வதற்கு தேவையான மூலப் பொருட்களுக்காக பாரிய முதலீடு ஒன்று ஒரே தடவையில் மேற்கொள்ள நேரிடுகின்றது. பாரிய எண்ணிக்கையான உணவு உற்பத்தி செய்யும் நிறுவனங்களில் இருந்து போட்டி அடிப்படையான விலைகளின் மூலம் அனேக சந்தர்ப்பங்களில் அனுகூலங்கள் ஏற்படுகின்றன. சபையில் குறைந்த கொள்திறனுடனான மிகவும பழமையான இயந்திரங்களாக காணப்படுவதுடன் அவற்றின் வினைத்திறன் மிகவும் குறைந்தது. அதன் காரணமாக நிலவும் தேவைப்பாட்டினை முழுமையாக பெற்றுக் கொள்ள முடியாமை மற்றும் அநேக சந்தர்ப்பங்களில் உற்பத்தி கிரயம் அதிகரிப்பதனால் திறந்த போட்டி அடிப்படை கூறுவிலைகளின் கீழ் வெளிநிறுவனங்களில் இருந்து கால்நடை உணவுகள் கொள்வனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | விளைவற்றுக் காணப்படும் கோழி உணவு தயாரிப்பு இயந்திரங்களை பயன்படுத்த வேண்டும். |
| (இ) | 2020 திசெம்பர் 31 திகதியளவில் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை, வ/ப மஹாவலி கால்நடை உணவு வர்த்தகக் கம்பனி மற்றும் வ/ப | இந்த காணிகளில் கணிசமான எண்ணிக்கை உணர்வுபூர்வமான வலயங்களான<br><br>உதா:- நீரேந்து பிரதேசங்கள் | பயன்படுத்தப்படாத காணிகளை ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இலங்கை கோழி வளர்ப்பு அபிவிருத்தி (தனியார்) கம்பனி ஆகிய மூன்று கம்பனிகளுக்கு 12,617.43 ஹெக்டயர் காணியில் 2,311.35 ஹெக்டயர் பயன்படுத்தப்படாத நிலப் பகுதிகள் காணப்பட்டது என கண்டறியப்பட்டது. | கால்நடை மற்றும் புட்கள் பாதுகாப்பு பிரதேசங்கள் ஆகிய நிரந்தரமாக பயன்படுத்த முடியாத இடங்களில் அமைந்துள்ளது. அந்த தரைப் பகுதிகளை பயன்படுத்தப்படாத இடங்கள் என குறிப்பிடப்பட்ட போதிலும் அவை மிருகங்களின் பயன்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது. | |

**3.6 பெறுகை முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் குறைந்த அளவு மூன்று வருட காலப் பகுதிக்காக பிரதான பெறுகைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு, அதன் பின்னர் தொடர்ந்து வரும் ஆண்டிற்கான பெறுகை அலுவல்கள், பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 வரை காட்டப்பட்டுள்ள விடயங்கள் அடங்கு முகமாக பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான விடயங்கள் அடங்கிய பெறுகைத் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் அந்த குறைபாடுகளை தவிர்ந்து கொள்வதற்காக பதவியணியினரை அறிவுறுத்தப்பட்டது. | பெறுகை வழிகாட்டல் கோவையின் படி பெறுகைத் திட்டம் ஒன்று தயாரிக்க வேண்டும். |
| (ஆ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.3 இன் படி பெறுகை நேரசூசி ஒன்று தயாரிக்கப்பட்டு கட்டம் 1 மற்றும் கட்டம் 2 இன் படி முறையான முகாமைத்துவம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் 2019, 2020 மற்றும் 2021 ஆண்டுகளுக்கான பெறுகை திட்டத்தில் அடங்கியுள்ள அனைத்து கொள்வனவுகளின் ஆரம்பத் திகதி ஒவ்வொரு வருடத்தினதும் ஜனவரி 01 மற்றும் இறுதித் திகதி ஒவ்வொரு வருடத்தின் திசெம்பர் 31 திகதி வரை காட்டப்பட்டதுடன் கொள்வனவு மேற்கொள்ள வேண்டிய நிச்சயிக்கப்பட்ட காலவரையறை குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அந்த குறைபாடுகளை தவிர்ந்து கொள்வதற்காக பதவியணியினரை அறிவுறுத்தப்பட்டது. | பெறுகை வழிகாட்டல் கோவையின் படி பெறுகைத் திட்டம் ஒன்று தயாரிக்க வேண்டும். |
| (இ) | கால்நடை உணவு கொள்வனவு செய்தல் தொடர்ாக 2019 ஆண்டின் பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த தொகையை விட கூடுதலாக 2019 ஆண்டின் பெறுகை திட்டத்தில் கொள்வனவு செய்வதற்கு | எதிர்காலத்தில் அந்த குறைபாடுகளை தவிர்ந்து கொள்வதற்காக பதவியணியினரை அறிவுறுத்தப்பட்டது. | பெறுகை திட்டம் மற்றும் பாதீட்டு தகவல்களை ஒன்றிற்கு ஒன்று இணங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எதிர்பார்க்கப்பட்டிருந்த பெறுமதி 06 பண்ணைகளில் ரூபா 2,345,095 தொகை முதல் ரூபா 11,395,496 தொகை வரையான வீச்சாக காணப்படக் கூடியவாறு கூட்டுத்தொகை ரூபா 30,336,379 தொகை மிகையாகவும், 09 பண்ணைகளில் ரூபா 400,000 தொகை முதல் ரூபா 10,344,089 தொகை வீச்சொன்றான காணப்படக் கூடியவாறு கூட்டுத்தொகை ரூபா 35,711,445 தொகை குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்து. மேலும் 04 பண்ணைகளில் கால்நடை உணவு கொள்வனவு செய்யும் செலவுகள் பெறுகைத் திட்டத்தில் கைவிடப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | உரம் கொள்வனவு செய்தல் தொடர்பாக 07 பண்ணைகளில் 2019 ஆண்டு பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த தொகையை விட 2019 ஆண்டில் பெறுகை திட்டத்தில் கொள்வனவு செய்வதற்காக எதிர்பார்க்கப்பட்டிருந்த மொத்தப் பெறுமதி ரூபா 41,012,859 தொகை மிகையாகவும் 09 பண்ணைகளில் மொத்தப் பெறுமதி ரூபா 13,251,841 குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. மேலும் 6 பண்ணைகளில் உர கொள்வனவு செலவு பாதீட்டின் மூலமும் 3 பண்ணைகளின் உரக் கொள்வனவு செலவு பெறுகைத் திட்டத்தில் கைவிடப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் அந்த குறைபாடுகளை தவிர்ந்து கொள்வதற்காக பதவியணியினரை அறிவுறுத்தப்பட்டது. | பெறுகை திட்டம் மற்றும் பாதீட்டு தகவல்கள் ஒன்றிற்கு ஒன்று இணங்க வேண்டும். |
| (உ) | சபையின் 17 பண்ணைகளுக்கான 2020 ஆண்டின் உரச் செலவு ரூபா 61,605,729 தொகை மற்றும் 4 பண்ணைகளுக்கான மிருக வைத்திய/ மருந்தவகை செலவுகள் ரூபா 2,243,180 தொகை என மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்தச் செலவுகள் பெறுகைத் திட்டத்தில் திட்டமிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அந்த குறைபாடுகளை தவிர்ந்து கொள்வதற்காக பதவியணியினரை அறிவுறுத்தப்பட்டது. | பெறுகை திட்டம் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | பொலன்தலாவ பண்ணைக்காக 2020 ஆண்டிற்கான கால்நடை உணவுகளின் செலவு பாதீட்டில் ரூபா 424,075 தொகை என மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்தப் பண்ணைக்காக பெறுகைத் திட்டத்தில் மிருக உணவு | எதிர்காலத்தில் அந்த குறைபாடுகளை தவிர்ந்து கொள்வதற்காக பதவியணியினரை அறிவுறுத்தப்பட்டது. | பெறுகை திட்டம் மற்றும் பாதீட்டு தகவல்கள் ஒன்றிற்கு ஒன்று இணங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலவு திட்டமிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (எ) | கால்நடை உணவு கொள்வனவு செய்தல் தொடர்பாக 2021 ஆண்டிற்காக பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த தொகையை விட கூடுதலாக 2021 ஆண்டின் பெறுகைத் திட்டத்தின் மூலம் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த பெறுமதி 02 பண்ணைகளில் ரூபா 500 தொகையிலிருந்து ரூபா 56,117,036 தொகைக்கான வீச்சில் மிகையாகவும், 03 பண்ணைகளில் ரூபா 365 முதல் ரூபா 3,384,545 இற்கான வீச்சில் காணப்படுமாறு குறைவாகவும் காட்டப்பட்டிருந்து என அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் அந்த குறைபாடுகளை தவிர்ந்து கொள்வதற்காக பதவியணியினரை அறிவுறுத்தப்பட்டது. | பெறுகை திட்டம் மற்றும் பாதீட்டு தகவல்கள் ஒன்றிற்கு ஒன்று இணங்க வேண்டும். |
| (ஏ) | உர கொள்வனவு தொடர்பாக 01 பண்ணையில் 2021 ஆண்டின் பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த தொகையை விட கூடுதலாக 2021 ஆண்டின் பெறுகைத் திட்டத்தில் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட பெறுமதி ரூபா 44,540 தொகை மிகையாகவும் 5 பண்ணைகளில் மொத்தப் பெறுமதி ரூபா 1,231,024 தொகை குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. மேலும் 03 பண்ணைகளில் உரக் கொள்வனவு செலவு பெறுகை திட்டத்தில் கைவிடப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் அந்த குறைபாடுகளை தவிர்ந்து கொள்வதற்காக பதவியணியினரை அறிவுறுத்தப்பட்டது. | பெறுகை திட்டம் மற்றும் பாதீட்டு தகவல்கள் ஒன்றிற்கு ஒன்று இணங்க வேண்டும். |
| (ஐ) | ரிதீகம பண்ணையில் புட்பயிர்செய்கை அபிவிருத்திக்காக 04 தெளிப்பான நீர் முறைமைகள் மற்றும் 02 நீர்ப் பம்புகள் கொள்வனவு செய்தல் தொடர்பாக பரிசோதனை மேற்கொண்ட போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | இந்த பெறுகைக்காக பதில் பொது முகாமையாளரினால் 2019 மே 22 திகதி விவரக் குறிப்பு மற்றும் விலைகூறல் ஆவணங்கள் தயாரிப்பதற்காக 3 அங்கத்தவர்களைக் கொண்ட தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழு ஒன்று நியமனம் செய்யப்பட்டிருந்தது. 2019 ஆகஸ்ட் 21 திகதி தலைவரினால் மீண்டும் 5 அங்கத்தர்கள் கொண்ட தொழில்நுட்ப | அங்கத்தவர்கள் ஐந்து பேரைக் கொண்ட தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவொன்று சபைத் தலைவரினால் நியமனம் செய்யப்பட்டிருந்தது. பின்னர் 2021.08.21 திகதிய கடிதத்தின் மூலம் பதில் பொது முகாமையாளரினால் மீண்டும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவிற்காக ரிதியகம | பெறுகை வழிகாட்டல் கோவையின் படி செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பாய்வுக் குழுவொன்று விலைகூறல்களை மதிப்பாய்வு செய்வதற்காக நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன், அத் திகதியே பதில் கடமை பண்ணையின் உதவி முகாமையாளரை தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவிற்கு மேலதிகமாக நியமனம் செய்யப்பட்டிருந்தது. அதன்படி, முதலாவது குழுவின் அங்கத்தவர்களை அகற்றி விலைகூறல்களை மதிப்பாய்வு செய்வதற்காக மீண்டும் அந்த அங்கத்தவர்களில் இருவர் உட்பட 6 அங்கத்தவர்களைக் கொண்ட தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவொன்று நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும், பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.8.4 இன் பிரகாரம் திணைக்கள தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவிற்கான உச்சமட்ட அங்கத்தவர்களின் எண்ணிக்கை 5 ஆக இருக்க வேண்டும். | பண்ணையின் பதில் முகாமையாளர் நியமனம் செய்யப்பட்டிருந்தது. ஆறு அங்கத்தவர்களைக் கொண்ட தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவொன்று நியமனம் செய்ய முடியாது என்பதை ஏற்றுக்கொள்வதுடன், இந்த பெறுகையின் பின்னர் மேற்கொள்ளும் அனைத்து பெறுகை அலுவல்களிலும் பெறுகை வழிகாட்டல் கோவைக்கு அமைவாக தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு அங்கத்தவர்கள் நியமனம் செய்யப்பட்டது. | |
| (ii) | 2019 ஆகஸ்ட் 21 திகதிய ரிதியகம பண்ணையில் பதில் முகாமையாளர் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு அங்கத்தவர் என நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும், முகாமையாளரினால் 2019 ஆகஸ்ட் 22 திகதிய மற்றும் 2019 / டென்டர் என்ற இலக்கம் கொண்ட பொது முகாமையாளரை விளித்த கடிதத்தின் மூலம் பண்ணையில் தற்போது பயன்படுத்தும் 2 தெளிப்பான் நீர் முறைமைகள் தனியார் உற்பத்தி நிறுவனம் ஒன்றின் முகவர் நிலையத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்டவைகள் காணப்பட்டதுடன், அந்த நிறுவனத்தில் இருந்து புதிய இயந்திரங்கள் பெற்றுகொள்வதில் அனுகூலங்கள், அந்த நிறுவனத்தின் சேவைகளின் பண்புசார் தன்மை, அவரின் அனுபவம் மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் கவனத்தில் செலுத்த வேண்டுய யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதன்படி, அவர் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் அங்கத்தவர் ஒருவராக செயற்படுவதன் மூலம் அனைத்து தரப்பினருக்கும் நியாயமான, சமமான | குறிப்பிட்ட தெளிப்பான் நீர் முறைமை போஸயிட் இன்ஜினியரின் அக்ரோ பிவேட் நிறுவனத்திலிருந்த இறக்குமதி செய்யப்பட்டதுடன், இது வரை பயன்படுத்தப்பட்ட முறைமைகளின் பண்பு சார் தன்மை உள்ளதாக கணித்து அதற்கு சமமான தன்மையுள்ள தெளிப்பான் நீர் முறைமையொன்று கொள்வனவு செய்யும் குறிக்கோளுடன் மேற்கொள்ளப்பட்டது. | பெறுகை வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் உச்ச அளவில் ஒரே மாதிரியான சர்ந்தர்ப்பங்கள் வழங்கும் பெறுகைக் குறிக்கோள் உடைகின்றது என அவதானின்கப்பட்டது. | | |
| (iii) | பெறுகைகுரிய விபரக் குறிப்பு தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் அங்கத்தவரான பெண் பொறியியலாளரினால் தயாரிக்கப்பட்டு அந்தக் குழுவின் அங்கீகாரத்துடன், பதில் பொது முகாமையாளரினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.3.11 இன் பிரகாரம் மதிப்பீட்டுத் தொகையில் 1 சதவீதம் முதல் 2 சதவீதம் வரையான எண்ணிக்கைக்கு சமமான நிச்சயிக்கப்பட்ட தொகையொன்று விலைகூறல் பாதுகாப்பு முறி என விதிக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணாக விலைகூறல் பாதுகாப்பு முறி என ஒப்பந்தக்காரரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஒப்பந்தப் பெறுமதியின் 2 சதவீத வங்கிப் பிணையொன்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | இந்த பெறுகையின் பின்னர் மேற்கொள்ளும் பெறுகை அலுவல்களிலும் பெறுகை வழிகாட்டல் கோவைக்கு அமைவாக விலைகூறல் பிணைமுறி பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது | மதிப்பீட்டுத் தொகையில் 1 சதவீதம் முதல் 2 சதவீதம் வரையான எண்ணிக்கைக்கு சமமான நிச்சயிக்கப்பட்ட தொகையொன்று விலைகூறல் பாதுகாப்பு முறி என பெற வேண்டும் |
| (iv) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 6.3.3 இன் பிரகாரம் பெறுகைக் குழுவின் இணக்கப்பாட்டுடன் முறைசார் விதமாக விலைகூறல் திறக்கும் குழுவொன்று நியமனம் செய்திருக்காததுடன், பெறுகை வழிகாட்டல் கோவையின் 6.3.6 இன் பிரகாரம் விலைகூறல்தாரரின் பெயர், பெறுமதி கூட்டிய வரியுடன் பெறுமதி கூட்டிய வரியின்றி, விலைகூறல் விலைகள், விலைகூறல் பாதுகாப்பு முறி காணப்படும் வங்கி மற்றும் தொகை ஆகிய நிதிசார் தகவல்கள் அடங்கிய அறிக்கைக் குறிப்பு தயாரித்திருக்கவில்லை. | இந்த கூறுவிலைகள் முறைசார் விலைகூறல் திறக்கும் குழுவின் கீழ் திறக்கப்பட்டவுடன், நிதிசார் தகவல்கள் மற்றும் ஏனைய தகவல்கள் அடங்கிய அறிக்கைக் குறிப்பொன்று தயாரிக்கப்படவில்லை. | பெறுகை வழிகாட்டல் கோவையின் படி நிதிசார் தகவல்கள் அடங்கிய அறிக்கைக் குறிப்பொன்று தயாரிக்கப்பட வேண்டும் |
| (v) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 7.9.2. இன் பிரகாரம் மாற்று விலைகூறலில் கவனம் செலுத்தும் போது அந்த விலைகூறலுக்காக தனியாக விலைகூறல் பாதுகாப்பு முறியொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், கூடிய | இந்த 04 இயந்திரங்கள் 02 கட்டங்களின் கீழ் 02 இயந்திரங்கள் வீதம் கொள்வனவு செய்யப்பட்டதுடன், இந்த 02 சந்தர்ப்பங்களுக்காக வெவ்வேறாக குறிப்பிட்ட கம்பனியினால் விலைகூறல் பாதுகாப்பு முறி | பெறுகை வழிகாட்டல் கோவையின் படி மாற்று விலைகூறல்களுக்காக விலைகூறல் பாதுகாப்பு முறி ஒன்று பெற்றுக்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்ட கம்பனியினால் ரூபா 39,000,000 தொகை என காட்டப்பட்டிருந்த மாற்று விலைகூறல்களுக்காக விலைகூறல் பாதுகாப்பு முறியொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்காத போதிலும் மாற்று விலைகூறலை மதிப்பாய்வு செய்வதற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. | சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | |
| (vi) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.11.3 இன் பிரகாரம் விலைகூறல் மதிப்பாய்வு பொழிப்பு அறிக்கையொன்று மற்றும் பெறுகை வழிகாட்டல் கோவையின் 7.11.1 இன் பிரகாரம் விலைகூறல் மதிப்பாய்வு அறிக்கை தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்காததுடன், தொழில்நுட்ப மதிப்பாய்வு கூட்ட அறிக்கை குறிப்புகள் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | விலைகூறல் மதிப்பாய்வு பொழிப்பு அறிக்கை தயாரிக்கப்படவில்லை. | பெறுகை வழிகாட்டல் கோவையின் படி பொழிப்பு மதிப்பாய்வு அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். |
| (vii) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 7.9.2 இன் பிரகாரம் பொறியியல் மதிப்பீடு மற்றும் ஒப்பந்தத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டுக்கு இடையே பாரிய வித்தியாசங்கள் காட்டப்படின் அந்த வித்தியாசத்திற்கான காரணங்களை பகுப்பாய்வு செய்து மதிப்பீட்டை மீளாய்வு செய்து அனைத்து விலைகூறல்களையும் இரத்துச் செய்வதற்கு அல்லது விலைகூறல் ஏற்றுக்கொள்வது எனின், மேலதிய செயலாற்றுகை பாதுகாப்பு முறியொன்று கோறலும் மேற்கொள்ள வேண்டும். இந்த பெறுகையின் பொறியியல் மதிப்பீடு (பெறுமதி கூட்டிய வரி இன்றி) ரூபா 28,400,000 தொகையாக காணப்பட்டதுடன், விலைகூறல் அழைப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்ட வழங்குனரின் விலை (பெறுமதி கூட்டிய வரி இன்றி) ரூபா 38,999,996 தொகையாகும். அதன்படி, அந்தப் பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதியை விட 37 சதவீதம் மிகையாக காணப்பட்ட போதிலும் காரணப் பகுப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த 04 இயந்திரங்கள் 02 கட்டங்களின் கீழ் 02 இயந்திரங்கள் வீதம் கொள்வனவு செய்யப்பட்டதுடன், இந்த 02 சந்தர்ப்பங்களுக்காக வெவ்வேறாக குறிப்பிட்ட கம்பனியினால் விலைகூறல் பாதுகாப்பு முறி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | பொறியியல் மதிப்பீடு மற்றும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலைக்கிடையே பாரிய வித்தியாசம் ஒன்று காணப்படின் கூறுவிலைகளை மறுப்பதற்கு அல்லது மேலதிக செயலாற்றுகை பாதுகாப்பு முறியொன்று பெற்றுக்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (viii) | பிரதான பெறுகைக் குழுவினால் 2019 செம்தம்பர் 27 திகதி நடைபெற்ற குழுக் கூட்டத்தில் 2 தெளிப்பான் நீர் முறைமைகள் மற்றும் 1 நீர்ப் பம்பு கொள்வனவு செய்தவற்காக தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்காக மேற்கூறிய கூறுவிலைகளின் படி ரூபா 19,499,998 தொகை செலவிட நேரிடும் என அவதானிக்கப்பட்டது. அதன்படி, பெறுகை நிறுவனத்தின் தேவைப்பாட்டில் பாதி அளவு மாத்திரம் நிறைவேற்றிக் கொண்டிருந்ததென அவதானிக்கப்பட்டிருந்ததுடன், குறைந்த கூறுவிலை ஏற்றுக்கொள்ளப்படின், அந்த விலை மதிப்பீட்டுக் கிரயத்தை விட 27 சதவீதம் (38,999,996/2-28,400,000/2)/19,499,998*100 மிகையாக இருந்ததென அவதானிக்கப்பட்டது. | அப்போது சபையில் காணப்பட்ட நிதி நிலைமையை கவனத்தில் எடுத்து இரண்டு கட்டங்களில் மேற்கூறிய் தெளிப்பான் நீர் முறைமையை கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. | சபைக்கு மிகவும் அநுகூலமாக பெறுகை அலுவல்கள் திட்டமிடப்பட வேண்டும். |
| (ix) | குறைந்த கூறுவிலை என ரூபா 35,027,446 தொகை மற்றும் இரண்டாவது குறைந்த கூறுவிலை என ரூபா 38,999,996 தொகை என 2 கம்பனிகளில் இருந்து சமர்ப்பிக்கப்பட்டு இருந்ததுடன் இரண்டாவது குறைந்த கூறுவிலை சமர்ப்பித்திருந்த கம்பனியில் இருந்து கொள்வனவு செய்வதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும் நியாயமான அடிப்படையின்றி குறைந்த விலையுடனான நிறுவனத்தை மறுதலிக்கப்பட்டிருந்தமையால் சபைக்கு ரூபா 3,972,550 இற்கான நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்தது. அங்கு பத்து நீர்ப் பம்புகள் உள்நாட்டு வியாபாரச் சின்னத்தின் கீழ் வழங்குவதற்கான காரணம் எனக் காட்டப்பட்டிருந்தது. அந்த குறைந்த கூறுவிலை மறுதலிக்கப்பட்டது என தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழுவின் பரிந்துரைகளில் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் 2019 ஆகஸ்ட் 30 திகதி பதில் பொது முகாமையாளரினால் கூறுவிலைகள் தெளிவின்மையால் வெவ்வேறாக மீண்டும் கூறுவிலைகள் சமர்ப்பிக்கும் படி வழங்குனருக்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன், 2019 செப்தெம்பர் 05 திகதி வெவ்வேறாக கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு முன்னர் அதாவது | குறிப்பிட்ட நிறுவனங்களில் இருந்து கொள்வனவு செய்யாமல் இருப்பதற்கு காரணங்கள் தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருந்தது. | குறைந்த விலையை மறுக்கப்பட்டிருந்தது தொடர்பாக விசாரணை ஒன்று மேற்கொண்டு அதன் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2019 ஆகஸ்ட் 23 திகதி தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் இந்த வழங்குனருக்கு விலைகூறலை வழங்குவது பொருத்தம் என குறிப்பிட்டு பரிந்துரைக்கப்பட்டிருந்தது. இந்த விலைகூறல் குறைந்த விலையை விட 11 சதவீதம் கூடிய பெறுமதி ஒன்றினை கொண்டிருந்தது. | | |
| (x) | விலைகூறல் அழைப்புப் பதிவேட்டில் விலைகூறல் மதிப்பாய்வு விவரக் குறிப்புக்கள் என இயந்திரத்தை பொருத்தும் காலம் உச்ச மட்ட கட்டளை நாள் முதல் 75 நாட்களாக காணப்பட வேண்டியிருந்த போதிலும் தெரிவு செய்யப்பட்ட வழங்குனரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலைகூறல் ஆவணங்களில் 120 நாட்கள் என காட்டப்பட்டிருந்தமையால், இந்த விவரக் குறிப்பு விலைகூறல் வழங்களின் போது கவனம் செலுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | எங்களினால் இயந்திரங்களை பொருத்தும் உச்சமட்ட கட்டளையிடும் காலம் 75 நாட்கள் என காட்டப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட இயந்திரங்கள் இறக்குமதி செய்து பொருத்துவதற்காக தேவைப்படும் காலம் தொடர்பான அறிவு குறிப்பிட்ட நிறுவனத்திடமே காணப்படுகின்றது. குறிப்பிட்ட நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்டு இருந்த காலத்தினை கவனத்தில் எடுத்து குறிப்பிட்ட முறைமைகள் கொள்வனவு செய்யப்பட்டது. | விலைகூறல் வழங்கும் போது இயந்திரங்கள் பொருத்தும் காலம் தொடர்பான விவரக் குறிப்பு மீது கவனம் செலுத்த வேண்டும். |
| (ஒ) | மெனிக்பாலம மற்றும் போபத்தலாவ பண்ணைகளின் 2021 ஆண்டின் வரைபு இலாப/ நட்ட கணக்கின் படி கால்நடை உணவுச் செலவு ரூபா 95,042,252 தொகை மற்றும் ரூபா 80,101,231 தொகை மற்றும் அவற்றில் 2021 ஜுலை முதல் 2021 திசெம்பர் வரை கால்நடை உணவுச் செலவு முறையே ரூபா 47,172,625 தொகை மற்றும் ரூபா 41,924,825 தொகை ஆகக் காணப்பட்டதுடன், அது ஆண்டிற்கான மொத்த கால்நடை உணவுச் செலவில் 50 சதவீதம் மற்றும் 52 சதவீதமாகும். 2021 ஜுலை முதல் 2021 திசெம்பர் வரை 02 கால்நடை உணவு கொள்வனவுகள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | மெனிக்பாலம மற்றும் போபத்தலாவ பண்ணைகளில் 2021 ஜுலை 01 திகதி முதல் 2021 திசெம்பர் 31 திகதி வரையான காலப் பகுதிக்காக தேவையான கால்நடை உணவு முறையே (மில்கின் கவ் மேஷ் பீட் - டயிப் I ) 489.964 மற்றும் 404.967 மெற்றிக் தொன்களாகும். (மில்கின் கவ் மேஷ் பீட் - டயிப் II ) 232.04 தொகை | மெனிக்பாலம பண்ணைக்காக மதிப்பீட்டு மொத்தக் கிரயத்தை உட்படுத்தி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.<br><br>போபத்தலாவ பண்ணையில் கால்நடை உணவு கொள்வனவு செய்வதற்காக வருடாந்த மதிப்பீடு | பெறுகை வழிகாட்டல் கோவையின் படி மொத்தக் கிரய மதிப்பீடொன்று மற்றும் பெறுகை நேரசூசி ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் 154.582 தொகை மெற்றிக் தொன்களும், காப் ஸ்டாரர் பெலேடட் பீட் 6.143 மெற்றிக் தொன்கள் மற்றும் 8.325 தொகை மெற்றிக் தொன்கள் என மொத்த கால்நடை உணவு கூட்டுத்தொகை 728.147 மற்றும் 567.874 தொகை மெற்றிக் தொன்கள் கொள்வனவு செய்வதற்கு உள்நாட்டு போட்டி கூறுவிலை அழைப்பு முறையின் கீழ் சபையில் மேற்கொள்வதற்கு பெறுகை குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.3, 4.2.2 மற்றும் 4.2.3 பிரகாரம் மொத்த கிரய மதிப்பீடொன்று மற்றும் பெறுகை நேரசூசி தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | ஒன்று தயாரக்கப்பட்டு அதனை பெறுகைத் திட்டத்தில் உட்படுத்தி பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் பெறுகை நேரசூசி ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | |
| (ii) | மஹவெலி பீட் மீல்ஸ் கம்பனிக்கு மற்றும் பெல்வத்த டயிரி இன்டர்ஸ்டீஸ் கம்பனிக்கு ஏற்புக் கடிதம் அனுப்பப்பட்டிருந்த போதிலும் பெறுகை வழிகாட்டல் கைநூலின் 8.9.3 மற்றும் பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9 பிரகாரம் எழுத்துமூல ஒப்பந்தவேலை உடன்படிக்கை ஒன்று வழங்குனருடன் கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆண்டு முதல் போபத்தலாவ மற்றும் மெனிக்பாலம ஆகிய இரண்டு பண்ணைகளில் முறையான கால்நடை உணவு கொள்வனவு செய்யும் டென்டர் வழங்கல் தொடர்பாக முறையான ஒப்பந்த உடன்படிக்கை கையொப்பமிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வழங்குனருடன் எழுத்துமூல உடன்படிக்கை ஒன்று கையொப்பமிடப்பட வேண்டும். |
| (iii) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.8 பிரகாரம் மற்றும் சபையின் விலைகூறல் பதிவேட்டில் படி தெரிவு செய்யப்பட்ட வழங்குனருக்கு கட்டளைகள் வழங்கிய நாள் முதல் 14 நாட்களுக்குள் செயலாற்றுகை பாதுகாப்பு முறி ஒன்று அந்த தெரிவு செய்யப்பட்ட வழங்குனரிடம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த கோவையில் அடங்கிய 2021 செப்தெம்பர் மாதம் 27 திகதிய கடிதத்தின் படி கட்டளைகள் வழங்கப்பட்டு 87 நாட்கள் கடந்திருந்த போதிலும் செயலாற்றுகை பாதுகாப்பு முறி ஒன்று பெற்றுக் கொண்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | 2022 ஆண்டு முதல் செயலாற்றுகை பாதுகாப்புமுறி பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 14 நாட்களுக்குள் வழங்குனர்களிடம் செயலாற்றுகை பாதுகாப்பு முறி ஒன்று பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (iv) | பெறுகை வழிகாட்டல் கோவையின் | 2022 ஆண்டு முதல் அவ்வாறு | பெறுகை வழிகாட்டல் |

| | | | |
|---|---|---|---|
| | 8.11.4 (அ)(ii) பிரகாரம் ரூபா 5 மில்லியனுக்கு மிகையான ஒப்பந்த வேலைகளுக்காக செயலாற்றுகை பிணைமுறி சமர்ப்பிப்பதற்கு முடியாத போது வழங்கும் நிறுவனத்தின் பெயரை மீறிய ஒப்பந்தக்காரரின் அட்டவணையில் உட்படுத்தாமல் இருப்பதற்கான காரணம் தொடர்பாக இரண்டு வாரங்களுக்குள் எழுத்துமூல காரணங்கள் குறிப்பிடுமாறு விதிக்கப்பட்டு பெறுகை நிறுவனத்தினால் அந்த ஒப்பந்காரருக்கு எழுத்துமூலம் அறிவித்தல் ஒன்று அனுப்பப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டல் கோவை 8.11.4 (அ)(ii) பிரகாரம் செயற்பட்டிருந்தது. | கோவையின் படி ஒப்பந்தக்காரருக்கு எழுத்துமூலம் அறிவித்தல் ஒன்று அனுப்பப்பட வேண்டும். |
| (v) | மஹவெலி பீட் மில்ஸ் கம்பனியினால் விலை அதிகரிப்பொன்று மேற்கொள்ளப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்த உடன்படிக்கை கையொப்பம் இடப்பட்டு இருப்பின் பின்னர் விலை அதிகரிப்பொன்று மேற்கொள்ளல் தேவைப்படாததுடன் செயலாற்றுகை பிணைமுறி பெற்றுக் கொண்டிருந்தால் அவ்வாறு விலை அதிகரித்திருந்தாலும் அந்த அதிகரித்த கால்நடை உணவு கொள்வனவு செய்யும் செலவு செயலாற்றுகை பிணை முறியின் மூலம் அணவல் செய்வதற்கான சந்தர்ப்பத்தை இழந்து மேலதிக கிரயம் ஒன்றை மேற்கொண்டு Milking Cow Mash Feed (Type I) மெனிக்பாலம பண்ணைக்கு 244.98 மெற்றிக் தொன்கள் மற்றும் போபத்தலாவ பண்ணைக்கு 202.48 தொன்களுக்காக மீண்டும் கூறுவிலைகள் அழைக்கப்பட்டிருந்தது. | மஹவெலி பீட் மில்ஸ் கம்பனிக்கு சபைக்கு கால்நடை உணவு வழங்குவது தொடர்பாக அப்போது நிலுவைத் தொகை என செலுத்த வேண்டியிருந்த ரூபா 24 மில்லியன் தொகையொன்று காணப்பட்டமையால் குறிப்பிட்ட கம்பனியினால் செயலாற்றுகை பாதுகாப்பு முறி ஒன்று சமர்ப்பிப்பதற்காக மறுத்திருந்ததுடன் கம்பனியினால் கால்நடை உணவு கூறுவிலைகள் அதிகரித்த காரணத்தினால் மீண்டும் குறைவிலைகள் அழைப்பதற்கு நேரிட்டது. | ஒப்பந்த உடன்படிக்கை கையொப்பமிடும் சந்தர்ப்பத்தில் வழங்குனருடன் செயலாற்றுகை பாதுகாப்பு முறி ஒன்று பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (ஓ) | போபத்தலாவ பண்ணையில் 2021 ஆண்டில் பிராணிகள் விற்பனை பதிவேட்டை பரிசோதனை செய்த போது பண்ணைக்கு அண்மையுள்ள நகரமாகிய ஆகரபதன நகரத்தின் கொள்வனவாளர்கள் இருவர் மாத்திரம் விண்ணப்பங்கள் அழைப்பதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்ததெனவும், ஏனைய அனைத்து கொள்வனவாளர்களும் கொழும்பு, வெலிசர, நுவரெலியா ஆகிய தூர | இந்த கால்நடைகளை கொள்வனவு செய்வதற்காக 30 எண்ணிக்கையான கொள்வனவாளர்களிடமிருந்து விண்ணப்பப்பத்திரம் அழைக்கப்பட்ட போதிலும், இதற்கான கூறுவிலைகள் இரண்டு கொள்வனவாளர் மாத்திரம் சமர்ப்பித்திருந்தனர். போக்குவரத்து சிரமம் மற்றும் போக்குவரத்துக்காக | வழங்குனர்கள் அதிக எண்ணிக்கையாளர்களிடம் விண்ணப்பம் அழைப்பதன் மூலம் கூடிய விலையொன்று பெற்றுக்கொள்ள முடியும். |

| | | |
|---|---|---|
| இடங்களைச் சேர்ந்த கொள்வனவாளர்களாக இருந்ததுடன், அவ்வாறு தூர பிரதேசங்களைச் சேர்ந்த கொள்வனவாளர்களுக்காக விண்ணப்பங்கள் அனுப்புவது மறுக்கப்பட்டிருந்தது எனவும் அவதானிக்கப்பட்டது. அதன்படி, குறிப்பிட்ட டென்டர்களுக்காக விண்ணப்பங்கள் அனுப்புவதிலும் ஆகரபத்தன கொள்வனவாளர்கள் இருவருக்கு வரையறுக்கப்பட்டிருந்ததுடன், அதன் காரணமாக ஏனைய கொள்வனவாளர்களிடம் இருந்து உச்சமட்ட விலையொன்று பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்த சந்தர்ப்பத்தை பண்ணை இழந்திருந்தது. அதேபோல் பண்ணையினால் ஆகரபத்தன நகரமாகிய பண்ணைக்கு அண்மையிலுள்ள நகரத்தை சேர்ந்த கொள்வனவாளர்கள் கூடிய எண்ணிக்கையினரே தெரிவு செய்து விண்ணப்பங்கள் அழைப்பதன் மூலம் கூடிய டென்டர் பத்திர எண்ணிக்கைகள் பெற்றுக்கொள்வது போலவே கூடிய விலை சமர்ப்பிக்கும் கொள்வனவாளர்கள் தெரிவு செய்வதற்கு பண்ணைக்கு காணப்பட்ட சந்தர்ப்பத்தை இழந்து இருந்தது என அவதானிக்கப்பட்டது. | செலவிடப்படும் மிகைச் செலவு காரணமாக ஏனைய பிரதேசங்களில் இருந்து கொள்வனவாளர்களோ வழங்குனர்களோ பண்ணைக்கு கால்நடைகளை கொள்வனவு செய்வதற்காக மற்றும் பண்ணைக்கு பண்டங்கள் வழங்குவதை மறுக்கப்படுகின்றது. | |

## 3.7 ஏனைய அமைப்புக்களுக்குரிய வளங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆண்டின் போது சபைக்குச் சொந்தமான ரூபா 167.1 மில்லியன் பெறுமதியான 440 ஏக்கர் காணி BOI நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டதுடன், பெற்றுக்கொள்ளல் தொடர்பான சட்டரீதியான ஆவணங்கள் ஏதும் சபையில் காணப்படவில்லை. | இது அரச தீர்மானம் ஒன்றின் மீது பெறப்பட்டதாகும். | சபைக்குச் சொந்தமான காணிகள் விடுவிக்கும் போது சட்ட கொள்கை முறையொன்று கடைபிடிக்கப்பட வேண்டும். |

## 3.8 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019, 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் போது சிரேஷ் மட்ட வெற்றிடங்கள் முறையே 33, 12 மற்றும் 38 | வெற்றிடம் ஏற்பட்டிருந்தது MM 1-1 தொகுதியில் 1 ஆம் தரப் | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | தொகைகளும், மூன்றாம் மட்ட வெற்றிடங்கள் முறையே 12, 10 மற்றும் 14 தொகைகளும், இரண்டாம் மட்ட வெற்றிடங்கள் முறையே 7, 22 மற்றும் 7 தொகைகளும், ஆரம்ப மட்ட வெற்றிடங்கள் 42, 102 மற்றும் 113 தொகை காணப்பட்டதுடன், 2020 ஆண்டின் ஆரம்ப மட்டத்தில் ஊழியர் மிகை 64 உம் 2021 ஆண்டில் சிரேஷ்ட மட்ட, இரண்டாம் மட்ட மற்றும் ஆரம்ப மட்ட ஊழியர் மிகைகள் முறையே 8, 2 மற்றும் 61 ஆக காணப்பட்டது. | பதவியாகிய பண்ணை முகாமையாளர் மற்றும் தலைமை அலுவலகத்தின் 35 முகாமைத்துவப் பதவிகள் காரணமாகவே ஆகும்.<br>உதவி முகாமையாளர் பதவி 10 வருடங்களை விட மிகையான அனுபவம் உள்ள ஊழியர்கள் காணப்படாமையால் இந்த வெற்றிடம் காட்டப்படுகின்றது.<br>மூன்றாம் மட்டப் பதவி மற்றும் இரண்டாம் மட்ட உத்தியோகத்தர்களின் பதவி உயர்வுக்காக பேணிச் செல்லப்படுவதுடன், வெளியில் இருந்து உத்தியோகத்தர்கள் சேர்க்கப்படாமையால் இந்த வெற்றிடங்கள் காணப்படுகின்றன.<br>• இரண்டாம் மட்டத்தில் வெற்றிடங்கள் காணப்படுவதற்காக காரணம் என சபையின் வெளிக்கள கால்நடை உதவியாளர் (MA 1-2) பதவியில் இருக்கும் உத்தியோகத்தர்கள் அடிக்கடி தொழிலுக்காக வெளிநாடு செல்லல் மற்றும் சபையின் சேவையிலிருந்து கேட்டு விலகல் ஆகும்.<br>• ஆரம்ப மட்ட பதவிகளில் மிகைகள் காணப்படுவது பால் விற்பனை நிலையங்களுக்காக விற்பனை உதவியாளர்கள் சேர்க்கப்பட்டிருந்த போதிலும் ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறை அங்கீகரிக்கப்பட்டிருக்காமையாலே ஆகும். | எடுக்கப்பட வேண்டியிருந்ததுடன், மிகை ஊழியர்களுக்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்ள முடியாவிடின் அவை சட்ட விரோதமான ஆட்சேர்ப்பு என கணித்து செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உதவிப் பொது முகாமையாளர் (நிதி) பதவி 02 வருடங்களும் 07 மாத காலமும் உள்ளகக் கணக்காய்வாளர் பதவி 02 வருடமும் 07 மாத காலம் வெற்றிடமாக காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. | உதவிப் பொது முகாமையாளர் (நிதி) பதவியின் வெற்றிடம் 2023 பெப்ரவரி மாதம் 01 திகதி நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்காக சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையின் படி வெளியிலிருந்து நிரப்ப முடியாததுடன், உதவி முகாமையாளர் பதவியில் 10 வருடங்களை விட மிகையான | வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அனுபவம் உள்ள ஊழியர்கள் காணப்படாமையால் இந்த வெற்றிடம் காட்டப்பட்டுள்ளது. | |

**3.9 வாகன முறைமை முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மெனிக்பாலம பண்ணையின் புற்கள் போக்குவரத்துக்காக பயன்படுத்தப்பட்டு வரும் 44-4856, 45-7370 ஆகிய Trailor களுக்காக கோப்புக்கள் பேணப்பட்டிருக்கவில்லை. | 44-4856 மற்றும் 45-7370 ஆகிய டிரக்டர் டேலர்களுக்காக கோப்பொன்று மெனிக்பாலம பண்ணையின் மூலம் பேணப்படாததுடன், குறிப்பிட்ட கோப்புக்கள் பேணுவதற்காக முகாமைத்துவத்திற்கு ஆலோசனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | வாகனங்களுக்காக முறையான உள்ளகக் கட்டுப்பாடொன்று பேணப்பட வேண்டும். |
| (ஆ) | அம்பகஸ்தோவ கமநல நிலையம் 49-1908 இலக்கம் கொண்ட குபோடோ டிரக்டர் வண்டியை 2020 ஜூலை 29 திகதி முதல் உரிமையை உரித்தாக்காமல் போபத்தலாவ பண்ணையின் பயன்பாட்டிற்கு எடுத்திருந்ததுடன், அந்த டிரக்டரினை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் மேற்கூறிய இரண்டு வருடங்களுக்காக ஓட்ட அட்டவணைகள் பேணப்பட்டிருக்கவில்லை. | கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் மூலம் பயன்படுத்தப்படாமல் காணப்பட்ட விவசாய இயந்திர உபகரணங்கள் சபையின் கோறிக்கையின் படி பண்ணையின் பயிர்ச் செய்கை அலுவல்களுக்கு பயன்படுத்துவதற்காக வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த இயந்திரங்களின் பதிவு செய்தல் உரிமையை பெற்றுக்கொள்ள வேண்டிய இயந்திர உபகரணங்களின் பதிவு செய்தல் உரிமை சபைக்கு பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பயன்படுத்தப்படும் இயந்திர உபகரணங்களின் உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | GB – 4430 இலக்கம் கொண்ட டிரக்டர் வண்டி 2020 ஆண்டு முதல் பயன்படுத்த முடியாத நிலைமைக்கு ஆளாகி இருந்ததுடன், 2022 மார்ச் 10 திகதி அளவிலும் திருத்த வேலை மேற்கொள்ளாமல் மெனிக்பாலம பண்ணையில் நிறுத்தப்பட்டு காணப்பட்டது. | GB – 4430 இலக்கம் கொண்ட மஹிந்தரா வகையை சேர்ந்த டிரக்டர் வண்டி மெனிக்பாலம பண்ணைக்கு சொந்தமானது அல்லாததுடன், கணக்காய்வு ஐயவினாவில் காட்டப்பட்டுள்ள காலப் பகுதியில் போபத்தலாவ பண்ணையில் நிறுத்தப்பட்டிருந்தது. சிறிய திருத்த வேலை அலுவல்கள் காரணமாக தேவையான உதிரிப் பாகங்கள் பெற்றுக்கொள்ளும் வரை ஓட்ட நிலையிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. | டிரக்டர் வண்டியை திருத்த வேலைகள் மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 கூட்டிணைந்த திட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016-2020 ஆண்டுகளுக்காக தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டம் மற்றும் 2020 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டில் வருமானம், செலவுகளை கவனத்தில் எடுத்த போது பொருண்மையான முரண்கள் அவதானிக்கப்பட்டது. எனினும் அதன்படி அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.1 பிரிவின் படி பிரகாரம் அந்த முரண்களை சரி செய்து 2019 ஆண்டு முதல் முன்கொண்டு வரப்பட்டு நாளதுவரை ஆக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்தம் கூட்டிணைந்த திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு திருத்த வேண்டிய பகுதிகள் திருத்தப்படல் சரியாக மேற்கொள்ளப்படாமையால் இந்த வழு ஏற்பட்டிருந்தமையால் எதிர்காலத்தில் வருடாந்தம் கூட்டிணைந்த திட்டம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கூட்டிணைந்த திட்டத்திற்கு எதிர்கால நாளதுவரை ஆக்கப்பட்ட தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2003 ஜூன் 02 திகதிய பீ.ஈ.டி 12 இலக்கங் கொண்ட அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 5.1.2 இன் பிரகாரம் கூட்டிணைந்த திட்டத்திற்கு உள்ளக்கப்பட வேண்டிய தற்போது நிறுவனத்தில் காணப்படும் தொழிநுட்ப அறிவு, சந்தைகள் மற்றும் வழங்குனர்கள், திட்டமிடப்பட்ட காலப் பகுதியில் நிறைவேற்றப்பட வேண்டிய இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் தொடர்பாக செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கிய முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள் ஆகிய விடயங்கள் 2016-2020 மற்றும் 2021-2025 கூட்டிணைந்த திட்டங்களில் உட்படுத்தப்பட்டு இருக்காததுடன், உற்பத்திகள் மற்றும் செயற்பாட்டு வசதிகள், மனிதவளங்கள் மற்றும் முகாமைத்துவத்தின் திறமைகள், அமைப்பு கட்டமைப்பு தொடர்பான தகவல்கள் 2016-2020 கூட்டிணைந்த திட்டத்தில் உட்படுத்தியிருக்கவில்லை. | எதிர்காலத்தில் குறைபாடுகளை தவிர்த்து கூட்டிணைந்த திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கூட்டிணைந்த திட்டத்தில் உட்படுத்த வேண்டிய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| | மேலும் சபையின் கீழ் செயற்படும் அங்கீகாரம் பெற்ற வர்த்தக நிலையங்கள் பால் செயற்திட்டங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தின் விற்பனை நிலையம் ஆகிய செயற்திட்டங்கள் தொடர்பான திட்டங்கள் காலவரையறைக்குரிய வருமானம், | | |

| | | | |
|---|---|---|---|
| | செலவு, இலக்குகள் மற்றும் ஏனைய தகவல்கள் 2016-2020 மற்றும் 2021-2025 கூட்டிணைந்த திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| | • 2019 மற்றும் 2020 ஆண்டுகளில் தென்னை செயற்திட்டத்தின் செலவுகளை கவனத்தில் எடுத்த போது 03 பண்ணைகளில் மற்றும் 02 பண்ணைகளின் பாதீட்டில் செலவு கூட்டிணைந்த திட்டத்தில் செலவை விட 18 முதல் 46 சதவீதம் வரை மற்றும் 05 மற்றும் 11 சதவீதம் வரை மிகையாக காட்டப்படலும், 12 பண்ணைகளில் மற்றும் 13 பண்ணைகளின் பாதீட்டின் செலவு கூட்டிணைந்த திட்டத்தின் செலவை விட 04 முதல் 55 சதவீதம் வரை மற்றும் 03 சதவீதம் முதல் 62 சதவீதம் வரை குறைவாகக் காட்டப்படல் என வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. மேலும் 2019 ஆண்டில் 04 பண்ணைகளில் 2020 ஆண்டில் 05 பண்ணைகளில் செலவுகள் கூட்டிணைந்த திட்டத்தில் கைவிடப்பட்டிருந்தது. | வருடாந்தம் கூட்டிணைந்த திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு திருத்த வேண்டிய பகுதிகள் திருத்தப்படல் சரியாக மேற்கொள்ளப்படாமையால் இந்த வழு ஏற்பட்டிருந்தமையால் எதிர்காலத்தில் வருடாந்தம் கூட்டிணைந்த திட்டம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கூட்டிணைந்த திட்டத்திற்கு பொருந்தக் கூடியவாறு பாதீட்டில் உட்படுத்தப்பட வேண்டிய அனைத்துத் தகவல்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | 2003 ஜுன் 02 திகதிய பீ.ஈ.டீ 12 இலக்கங் கொண்ட அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 5.1.3 பிரிவின் பிரகாரம் நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் வரிசை அமைச்சு, பகிரங்க தொழில் முயற்சிகள் திணைக்களம், திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2016-2020 கூட்டிணைந்த திட்டம் 2016 ஒக்தோபர் 27 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டு 2017 ஜுலை 12 திகதி எனவும் மற்றும் 2021-2025 கூட்டிணைந்த திட்டம் 2021 பெப்ரவரி 25 திகதி அங்கீகரிக்கப்பட்டு 2022 மார்ச் 15 திகதி எனவும் தாமதமாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | சபையினால் கடந்த ஆண்டுகளில் கூட்டிணைந்த திட்டம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், கணக்காய்வு தேவைப்பாடுகளின் படி கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கோரிக்கையின் படி அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு இருந்ததுடன், அந்த அறிக்கை எதிர்காலத்தில் தொடர்ச்சியாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். எவ்வாறாயினும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஏனைய நிறுவனங்களுக்கு அந்த திட்டம் சமர்ப்பித்தல் தொடர்பாக தாமதம் ஒன்று ஏற்பட்டிருந்தது என ஏற்றுக் கொள்வதுடன் எதிர்காலத்தில் அவ்வாறு நடைபெறாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கூட்டிணைந்த திட்டம் நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் உரிய நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2016-2020 கூட்டிணைந்த திட்டத்தில், ஓயாமடுவ, நிகவெரடிய, மெதரட பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை பொலன்னறுவ மற்றும் வீரவில பண்ணைகளில் விடுமுறை களிப்பிடங்கள் பேணிச் செல்லல் மற்றும் அதன் மூலம் இலாபம் உழைத்தல், கல்பொகுன பண்ணையின் விவசாய பயிற்சி நிலையத்தின் பாடநெறிகள் நடாத்துதல், மஹபேரியதன்ன பண்ணையில் மிளகு மற்றும் பழவகைகள் பயிர்செய்தல் ஆகிய குறிக்கோள்கள் காட்டப்பட்டிருந்த போதிலும் 2019 மற்றும் 2020 ஆண்டுகளின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அவ்வாறான தொழிற்பாடுகள் திட்டமிடப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கை திட்டத்தில் விடுமுறை களிப்பிடங்கள் தொடர்பான விபரங்கள் மற்றும் கல்பொகுன பயிற்சி நிலையத்தில் பாடநெறிகள் நடாத்துதல், மஹபேரியதன்ன பண்ணையில் மிளகு மற்றும் பழவகைகள் பயிர்செய்தல் ஆகிய குறிக்கோள்கள் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கூட்டிணைந்த திட்டத்தில் காணப்படும் தொழிற்பாடுகள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் சரியாக காட்டப்பட வேண்டும். |
| (உ) | கூட்டிணைந்த திட்டத்தில் 2019 ஆண்டில் 15 பண்ணைகளின் கீழ் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டு இருந்த 9 தொழிற்பாடுகள் மற்றும் 19 பண்ணைகளின் கீழ் 2020 ஆண்டில் செயற்படுத்துவதற்கு எதிர்ப்பார்க்கப்பட்டிருந்த 09 தொழிற்பாடுகள் செயற்படுத்துவதற்கு தேவையான திட்டங்கள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் திட்டமிடப்பட்டு அல்லது செயற்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | குறிப்பிட்ட தொழிற்பாடுகள் கூட்டிணைந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட ஆண்டில் அந்த தொழிற்பாடுகளை செயற்படுத்துவதற்காக தீர்மானிக்கப்பட்டால் மாத்திரமே செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கூட்டிணைந்த திட்டத்தில் காணப்படும் தொழிற்பாடுகள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் சரியாக காட்டப்பட வேண்டும். |

### 4.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 பெப்ரவரி 17 திகதிய 01/2014 இலக்கங் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 5(2) பந்தியின் பிரகாரம் வர்த்தக திட்டமொன்றினை அடிப்படையாகக் கொண்டு தொடர்ந்துவரும் நிதியாண்டில் செயற்படுத்துவதற்காக எதிர்பார்த்துள்ள வர்த்தக தொழிற்பாடுகள் உட்பட செயல் நடவடிக்கைத் திட்டத் ஒன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன், தயாரிக்கப்பட்டிருந்த 2019 மற்றும் 2020 ஆண்டுகளுக்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்க வேண்டிய வெலிசர பண்ணை தொடர்பான விபரங்களும், 2019, 2020 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளுக்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்க வேண்டிய பால் செயற்திட்டம், அங்கீகாரம் பெற்ற விற்பனை நிலையங்கள் மற்றும் தலைமை அலுவலக விற்பனை நிலையம் ஆகிய பிரிவுகளின் செயற்பாடுகள், வருடாந்த பாதீட்டில் உட்படுத்தப்பட வேண்டிய | இந்த குறைபாடுகளை எதிர்காலத்தில் தவிர்ந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் படி செயல்நடவடிக்கைத் திட்டம் குறிப்பிட்ட தினத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் அதில் அடங்க வேண்டிய தகவல்கள் சரியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதிநிலைமை கூற்று, கடனை திருப்பிச் செலுத்தும் திட்டம், நாளதுவரை ஆக்கப்பட்ட நிறுவனத்தின் அமைப்புக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் தற்போது இருக்கும் பதவியணி தொடர்பான விபரங்கள் ஆகிய விடயங்கள் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2019, 2020, 2021 ஆண்டுகளுக்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கியுள்ள முறையே 16 பண்ணைகளுக்கான 05 செயற்திட்டங்களுக்குரிய 24 தொழிற்பாடுகள் , 13 பண்ணைகளின் 02 செயற்திட்டங்களுக்குரிய 20 தொழிற்பாடுகள் மற்றும் 25 பண்ணைகளின் 08 செயற்திட்டங்களுக்கு உரிய 166 தொழிற்பாடுகள் அந்த ஆண்டின் போது முழுமையாக செயற்படுத்தப்பட்டிருக்காததுடன், செயற்படுத்தப்படாமைக்கான காரணங்களும் செயலாற்றுகை அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எமது நிறுவனத்தினால் முக்கிய கால்நடை வளர்ப்பு செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படுவதனால் அந்த செயற்திட்டங்களில் குறுகிய காலத்தில் ஏற்படும் சந்தை மாற்றங்கள் மற்றும் கேள்விகள் ஆகிய காரணிகளின் காரணமாக உற்பத்தி தொடர்ச்சியாக தளம்பல் ஏற்படுகின்றமையால் சிற்சில திட்டமிடப்பட்ட தொழிற்பாடுகள் அதே முறையில் மேற்கொள்வதற்கு முடியாமல் போன சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றது. நிதி ஏற்பாடுகள் ஆகிய பல்வேறு நடைமுறை சிக்கல்கள் காரணத்தினால் அந்த செயலாற்றுகை இலக்கிடப்பட்டவாறு நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியாமல் இருந்தது. 2019 ஆண்டு ஏற்பட்ட பாஸ்கு தாக்கத்தின் காரணத்தினால் சந்தையின் நிச்சயமற்ற தன்மை 2020, 2021 கொவிட் தொற்றுநோய் காரணமாக விவசாய உற்பத்திகள் குறைவடைதல் ஆகிய எம்மால் கட்டுப்படுத்த முடியாத வெளிக் காரணிகளின் காரணத்தினால் அநேகமான தொழிற்பாடுகள் செயல் | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்படும் முன்னேற்றத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (இ) | 2019, 2020, 2021 ஆண்டுகளுக்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கியுள்ள முறையே 24 பண்ணைகளின் 08 செயற்திட்டங்களுக்கு உரிய 58 தொழிற்பாடுகள், 27 பண்ணைகளின் 08 செயற்திட்டங்களுக்கு உரிய 87 தொழிற்பாடுகள் மற்றும் 29 பண்ணைகளுக்குரிய 11 செயற்திட்டங்களுக்கு உரிய 265 தொழிற்பாடுகளின் முன்னேற்றம் 1 சதவீதம் முதல் 49 சதவீதத்திற்கு இடைப்பட்ட பெறுமதி ஒன்றினை கொண்டிருந்ததுடன், உரிய முன்னேற்றத்தை நெருங்காமைக்கான காரணங்களும் காட்டப்பட்டிருக்கவில்லை. | | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்படும் முன்னேற்றத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (ஈ) | 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் செயலாற்றுகை பொழிப்பு அறிக்கையை இணக்கஞ் செய்தபோது 2020 ஆண்டிற்கு நேரொப்ப 04 செயற்திட்டங்களின் 15 தொழிற்பாடுகளின் உள்ளவாறான வெளியீடு 2 சதவீதம் முதல் 90 சதவீதம் வரையும், 06 செயற்திட்டங்களுக்கான 15 தொழிற்பாடுகளில் உள்ளவாறான வெளியீடு 04 சதவீதம் முதல் 98 சதவீதம் வரை விகிதாசாரத்தில் குறைந்திருந்தது என அவதானிக்கப்பட்டது. | | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்படும் முன்னேற்றத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். |

நடவடிக்கைத் திட்டத்தில் இருந்தவாறு செயற்படுத்துவதற்கு முடியாமல் போனது.

(உ) செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி 2019-2021 வரை சபையின் எதிர்பார்க்கப்பட்ட பால் உற்பத்தி செயலாற்றுகை அறிக்கையின் படி உள்ளவாறான பாலுற்பத்தி கீழ்வருமாறு குறைவடைதல் ஒன்று அவதானிக்கப்பட்டது.

| ஆண்டு | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி எதிர்பாரக்கப்பட்ட பால் உற்பத்தி (மில்லியன் லீற்றர்) | செயலாற்றுகை அறிக்கையின் படி உள்ளவாறான பால் உற்பத்தி (மில்லியன் லீற்றர்) | குறைவடைதல் (மில்லியன் லீற்றர்) |
|---|---|---|---|
| 2019 | 17.91 | 12.43 | 5.48 |
| 2020 | 15.11 | 12.03 | 3.08 |
| 2021 | 15.22 | 9.7 | 5.52 |

2019, 2020, 2021 ஆகிய ஆண்டுகளில் காணப்பட்ட விவசாய மற்றும் பொருளாதார சிக்கல்களுக்கு நேரடியாக ஆளானமையால் இலக்காகிய உற்பத்தியை பெற்றுக் கொள்வதற்கு முடியாமைக்கு காரணமாக இருந்தது.

எதிர்பார்க்கப்பட்ட பால் உற்பத்தியை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஊ) கூட்டிணைந்த திட்டத்தின் படி எதிர்பார்க்கப்பட்ட பால் உற்பத்தி மற்றும் செயலாற்றுகை அறிக்கையின் படி உள்ளவாறான பால் உற்பத்தியில் பின்வருமாறு குறைவடைதல் அவதானிக்கப்பட்டது.

| ஆண்டு | கூட்டிணைந்த திட்டத்தின் படி எதிர்பாரக்கப்பட்ட பால் உற்பத்தி (மில்லியன் லீற்றர்) | செயலாற்றுகை அறிக்கையின் படி உள்ளவாறான பால் உற்பத்தி (மில்லியன் லீற்றர்) | குறைவடைதல் (மில்லியன் லீற்றர்) |
|---|---|---|---|
| 2019 | 23.54 | 12.43 | 11.11 |
| 2020 | 23.92 | 12.03 | 11.89 |
| 2021 | 14.8 | 9.7 | 5.1 |

2019, 2020, 2021 ஆகிய ஆண்டுகளில் காணப்பட்ட விவசாய மற்றும் பொருளாதார சிக்கல்களுக்கு நேரடியாக ஆளானமையால் இலக்காகிய உற்பத்தியை பெற்றுக் கொள்வதற்கு முடியாமைக்கு காரணமாக இருந்தது.

எதிர்பார்க்கப்பட்ட பால் உற்பத்தியை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(எ) இறக்குமதி செய்யப்பட்ட பாற் பசுக்கள் காணப்படும் மெனிக்பாலம, போத்தலாவ மற்றும் ரிதியகம பண்ணைகளின் இறக்குமதி செய்யப்பட்ட பாற்பசுக்களில் இருந்து 2018, 2019, 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் போது பெற்றிருந்த பால் உற்பத்தி தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| பண்ணைகள் | பால் உற்பத்தி (லீற்றர்) 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|
| மெனிக்பாலம | 1,537,665 | 1,395,705 | 1,226,559 |
| ரிதியம | 7,132,284 | 6,827,458 | 4,864,983 |
| போபத்தலாவ | 1,134,265 | 1,169,795 | 1,116,391 |

2019, 2020, 2021 ஆகிய ஆண்டுகளில் காணப்பட்ட விவசாய மற்றும் பொருளாதார சிக்கல்களுக்கு நேரடியாக ஆளானமையால் இலக்காகிய உற்பத்தியை பெற்றுக் கொள்வதற்கு முடியாமைக்கு காரணமாக இருந்தது.

இறக்குமதி செய்யப்பட்ட பாற் பசுக்கள் இருக்கும் பண்ணைகளின் பால் உற்பத்தியை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஏ) உள்நாட்டு பாற்பசுக்கள் காணப்படும் 14 பண்ணைகளில் பாற்பசுக்களின் மூலம் 2018, 2019 மற்றும் 2020 ஆண்டுகளின் போது பெற்றுக் கொள்ளப்பட்ட பால்

2019, 2020, 2021 ஆகிய ஆண்டுகளில் காணப்பட்ட விவசாய

உள்நாட்டு பாற் பசுக்கள் இருக்கும் பண்ணைகளின்

உற்பத்தி தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

பால் உற்பத்தி (லீற்றர்)

| பண்ணைகள் | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|
| நிகவெரடிய | 88,452 | 64,646 | 54,467 |
| ருக்அத்தன | 146,009 | 115,240 | 100,714 |
| மரந்தவில | 109,513 | 69,639 | 81,832 |
| ஒயாமடுவ | 56,676 | 51,714 | 48,855 |
| மெல்சிரிபுர | 166,615 | 130,657 | 104,702 |
| ரொஸிடா | 107,468 | 114,366 | 93,968 |
| கொவுல்வெவ | 212,019 | 209,477 | 253,422 |
| மஹபேரிய தென்ன | 76,090 | 77,663 | 74,113 |
| சிரிங்கபாத | 85,572 | 80,354 | 75,457 |
| ஆடிகம | 237,209 | 238,241 | 220,883 |

மற்றும் பொருளாதார சிக்கல்களுக்கு நேரடியாக ஆளானமையால் இலக்காகிய உற்பத்தி யை பெற்றுக் கொள்வதற்கு முடியாமைக்கு காரணமாக இருந்தது.

பால் உற்பத்தியை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஐ) எருமை மாடுகள் காணப்படும் 05 பண்ணைகளில் எருமை மாடுகளில் இருந்து 2019, 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் போது பெற்றுக் கொண்ட பால் உற்பத்தி தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

பால் உற்பத்தி (லீற்றர்)

| பண்ணைகள் | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|
| வீரவில | 73,150 | 37,830 | 38,561 |
| பொலன்னறுவ | 263,912 | 217,842 | 199,652 |
| நிகவெரடிய | 50,086 | 52,175 | 59,250 |
| மெல்சிரிபுர | 120,604 | 124,380 | 115,982 |
| மரந்தவில | 167,451 | 149,975 | 173,749 |

2019, 2020, 2021 ஆகிய ஆண்டுகளில் காணப்பட்ட விவசாய மற்றும் பொருளாதார சிக்கல்களுக்கு நேரடியாக ஆளானமையால் இலக்காகிய உற்பத்தி யை பெற்றுக் கொள்வதற்கு முடியாமைக்கு காரணமாக இருந்தது.

எருமை மாடுகள் இருக்கும் பண்ணைகளின் பால் உற்பத்தியை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஒ) தென்னை செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் தேங்காய் உற்பத்தி தொடர்பாக 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கை முறையே 20,778,985 தொகை மற்றும் 20,631,018 தொகையும், 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் செயலாற்றுகையின் படி உள்ளவாறாக பெற்றுக் கொள்ளப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கை முறையே 13,860,239 தொகை மற்றும் 17,018,801 தொகையும் காணப்பட்டது.

எதிர்காலத்தில் அவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதவாறு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தியை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஓ) பொதி செய்யப்பட்ட திரவப்பால் (Fresh milk)இற்காக சந்தையில் கூடிய கேள்வி ஒன்று காணப்படுவதுடன் ஏனைய போட்டி நிறுவனங்கள் அந்த சந்தை

தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை சந்தை தேவைப்பாட்டை

சந்தையின் பங்கினை அதிகரித்துக் கொள்ள

| | | |
|---|---|---|
| தேவைப்பாட்டை இனங்கண்டு செயற்பட்ட போதிலும் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை நாட்டின் பிரதான பால் உற்பத்தியாளராக இருந்த போதிலும் அவ்வாறான சந்தர்ப்பங்களை இனங்கண்டு நிகழ்காலத்திற்கு பொருந்தக் கூடியவாறு நடவடிக்கை எடுத்து சந்தையின் பங்கை அதிகரித்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இனங்கண்டு எமக்கு சாட்டப்பட்டுள்ள விடயப் பரப்பில் செயற்பட்டு வருகின்றது. அங்கு திரவப்பால், பெறுமதி கூட்டிய உற்பத்தி என மாற்றுவது தேவையான விடயம் ஒன்றாக இருந்த போதிலும் காணப்படும் ஏற்பாடுகளின் கீழ் எமது நிறுவனத்திற்கு சொந்தமாக முதலீடு செய்யக் கூடிய இயலுமை முறையின் ஊடாக பெறுமதி கூட்டிய உற்பத்திகளை அதிகரிக்கப்பட்டு வருகின்றது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 ஜுன் 02 திகதிய பீ.ஈ.டீ.12 இலக்கங் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 5.2.4 இன் பிரகாரம் நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் வரைவு பாதீட்டுக்கு அங்கீகாரம் பெறுவதற்காக பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2019, 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் முறையே பாதீடு பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது 2019 பெப்ரவரி 26, 2020 பெப்ரவரி 02, 2021 திசெம்பர் 24 ஆகிய திகதிகளிலே ஆகும். | எதிர்காலத்தில் இந்த பலவீனத்தை தவிர்ந்து கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | சுற்றறிக்கையின் படி மூன்று மாதங்களுக்கு முன்னர் வரைவுப் பாதீட்டுக்கு அங்கீகாரம் பெற வேண்டும். |

## 4.4 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் அமைப்பினால் 2030 அளவில் தனது அமைப்பிற்கு உரிய அனைத்து நாடுகளினதும் பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு வழங்களை அடிப்படையாகக் கொண்டு நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்குப் பொருத்தமானவாறு எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களை இலக்குகள் மற்றும் சுட்டிகளை இனங்கண்டிருக்காததுடன் சரியான தரவுகள் பெற்றுக் கொள்ளும் மற்றும் பௌதீக வளங்கள் முகாமைத்துவம் செய்யும் செய்முறைகளும் இனங்கண்டிருக்கவில்லை. | ஐக்கிய நாடுகள் அமைப்பினால் அறிமுகப்படுத்தியிருந்த நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள் மிகவும் சரியாக செயற்படுத்துவதற்காக அமைச்சு மட்டத்தில் அல்லது ஏனைய முறைகளில் செயலமர்வு ஒன்று நடாத்தி அறிவுறுத்த வேண்டியுள்ளது. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோளை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |